
# The Bible Standard

(தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.

அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62:10**

**Translated from**
**BS#942**
**May-June 2024**

**பொருளடக்கம்**


✡ இஸ்ரயேலின் வேதாகம எல்லைகள் ...... 2

✡ சிறுமந்தைக்கான வாக்குத்தத்தங்கள் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக் காரர்களுக்கும் பொருத்தமானதே .......... 6

✡ கிரியை செய்யும் விசுவாசம்................. 13

✡ பரி.பவுல்–ஓர் தெரிந்தெடுக்கப்பட்ட பாத்திரமாக– தேவனை மகிமைப்படுத்தினார் ......................... 16

✡ வேதாகமம் பேசுகிறது ....................... 19



**BS Tamil Version - 84** **2024**

# இஸ்ரயேலின் வேதாகம எல்லைகள்

Bible Borders of Israel

**எசேக்கியேல் 38–39 ஆகிய அதிகாரங்களின் அடிப்படையில்**

எசேக்கியேலின் தீர்க்கதரிசனம் அடையாளங்களால் நிரம்பியுள்ளது, மேலும் இது பழைய ஏற்பாட்டின் வெளிப்படுத்தல் (அப்போகாலிப்ஸ்) என்று பொருத்தமாக அழைக்கப்பட்டுள்ளது. இது எசேக்கியேல் வாழ்ந்த பாபிலோனில்தான் எழுதப்பட்டது, ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் சிதேக்கியாவை சிங்காசனத்தில் அமர்த்தியபோது, அவரது பிற்கால படையெடுப்பிற்குப் பதினோரு ஆண்டுகளுக்கு முன்பு, தனது முதல் படையெடுப்பின் போது பாபிலோனியாவிற்கு கொண்டு செல்லப்பட்ட யூதாவின் கைதிகளில் இந்த எசேக்கியேல், ஒருவராக இருந்தார். அவரது அடுத்த படையெடுப்பில் சிதேக்கியா சிங்காசனத்தில் இருந்து அகற்றப்பட்ட போது (எசே. 21:25-27) நகரமும் அழிக்கப்பட்டது. முதல் படையெடுப்பின் போது யூத தேசத்தின் முதன்மையான மனிதர்கள், இளவரசர்கள் மற்றும் பிரபுக்கள், ஞானத்தில் தேறினவர்கள், மற்றும் அறிவில் சிறந்தவர்களுமாகிய பலர் சிறைபிடிக்கப்பட்டனர். சிறைபிடிக்கப்பட்டவர்களை அடிமைகளாகக் கருதாமல், அவர்களுக்கு பெரும் சுதந்திரம் வழங்கப்பட்டதால், இவர்களை சிறைபிடித்ததில் அவரது நோக்கம் தனது சொந்த சாம்ராஜ்யத்தை வலிமைப்படுத்துவதற்காகவே என்று தெரிகிறது. அவர்களில் சிலர், தானியேலின் காரியத்தைப் போலவே, ராஜ்யத்தின் மிக உயர்ந்த கனத்திற்குரிய பதவிகளுக்கு உயர்ந்தனர்.

எசேக்கியேலுக்கு மிகுந்த சுயாதீனம் இருந்தது; மேலும் நாடுகடத்தப்பட்டு பாபிலோனிய சிறையிருப்பிலிருந்த யூதர்களுக்காக அவருடைய தீர்க்கதரிசனம் அருளப்பட்டது. இந்த தீர்க்கதரிசியின் மூலமாக கொடுக்கப்பட்ட கர்த்தருடைய சாட்சியமானது சந்தேகத்திற்கிடமின்றி அவரது ஜனங்களான உத்தம இஸ்ரயேலர்களை உற்சாகப்படுத்தவும், ஆறுதல்படுத்தவும், மேலும் அவர்களின் இருதயங்களில் இன்னும் நிலைத்திருந்த விசுவாசத்தின் தீப்பொறியை தூண்டுவதற்காகவும் - தானியேலின் காரியத்தில் இருந்ததை போலவே, தேவ தயவு திரும்புவதையும், தேசம் 70 வருடங்கள் [606-536 BC] பாழாய்ப்போகும் என்று தீர்மானிக்கப்பட்டிருந்த காலம் நிறைவடையும் போது அவர்களுடைய சிறையிருப்பு முடிவடையும் என்ற நம்பிக்கையில் அவர்களை வழிநடத்தவும் நோக்கம் கொண்டதாக இருந்தது.

நமது பாடத்திலுள்ள காரியமானது, நாடுகடத்தப்பட்ட யூதர்களால் கேட்கப்பட்டு சந்தேகத்திற்கிடமின்றி, பூமிக்குரிய எருசலேமைக் குறிப்பிடுவதாகவும், யூதர்களுக்கு ஒரு தேசமாக ஆசீர்வாதங்கள் இருப்பதாகவும் சித்தரிக்கப்பட்டது. எருசலேம் மற்றும் தேவாலயத்தின் மறுசீரமைப்பு தெளிவாகவும் வெளிப்படையாகவும் முன்னறிவிக்கப்பட்டது, மேலும் சிறைபிடிக்கப்பட்டவர்களின் இருதயங்கள் எதிர்கால ஆசீர்வாதங்களை நினைத்து மகிழ்ச்சியில் துள்ளியதென்பதில் சந்தேகமில்லை; மேலும் சந்தேகத்திற்கு இடமின்றி, அவர்களின் விசுவாசம் மற்றும் நம்பிக்கை ஊக்குவிக்கப்பட்டன.

எசேக்கியேலின் தீர்க்கதரிசனம் நிச்சயமாக கர்த்தருடைய வார்த்தையாக இருந்தது, ஆனால் நிச்சயமாக அந்த தீர்க்கதரிசனமானது பாபிலோன் தேசத்திலிருந்து மீட்டெடுக்கப்பட்ட நேரத்தில் அந்த ஜனங்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஆசீர்வாதங்களுடன் தொடர்புடையவை அல்ல. ஏனென்றால் எசேக்கியேலின் தீர்க்கதரிசன முன்னறிவிப்புகள் ஒருபோதும் நிறைவேற்றப்படவில்லை. மிகவும் உறுதியாக, அவைகள் எதிர்காலத்திற்கு உரியவைகளாயிருந்தன. இப்போது, சுமார் 2500 ஆண்டுகளுக்குப் பிறகு, நாம் அவருடைய தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றத்தில் வாழ்கிறோம் என்று நம்புகிறோம்.

இது கேள்வியை எழுப்புகிறது: யூதர்கள் தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்புவதை வேதாகமம் கற்பிக்கிறதா? மேலும் ஆபிரகாமின் சந்ததியினர் அனைவருக்கும் அங்கே போதுமான இடம் இருக்கிறதா? ஆம், எசேக்கியேல் 37:12 இவ்வாறு கூறுகிறது: “**நான் உங்கள் பிரேதக்குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக்குழிகளிலிருந்து வெளிப்படவும், உங்களை இஸ்ரயேல் தேசத்துக்கு வரவும் பண்ணுவேன்.**” எசேக்கியேல் 36:35 கூறுகிறது, “**பாழாய்க் கிடந்த இத்தேசம்** (எரே.33:10), **ஏதேன் தோட்டத்தைப் போலாயிற்றென்றும் அவர்கள் சொல்லுவார்கள்.**”

யூதர்கள் தங்கள் சொந்த தேசத்தை விரைவாக தொடர்ந்து கட்டியெழுப்பி உள்ளனர். முறையான நீர்ப்பாசனத்தின் மூலமாக பயிரிடுதல் செய்து, பாலைவனத்தை மேலும் மேலும் ரோஜாவாக மலரச் செய்து, நகரங்கள் மற்றும் பட்டணங்கள் மேலும் மேலும் கட்டமைக்கப்படுவதாலும், ஜனத்தொகை அதிகரிப்பாலும், இஸ்ரயேல் ஒரு செல்வச்செழிப்பான நாடாக மாறியுள்ளது. உலகளாவிய அமைதியின்மை செழிப்பான யூதர்கள் பலரை மகா உபத்திரவ காலத்தின் எதிர்கால நிகழ்விலிருந்து

COURTESY BY :
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, **Leon Snyder.** Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

தங்களை பாதுகாப்பதற்காக, பல மில்லியன் கணக்கான பொக்கிஷங்களை அவர்களின் வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு திருப்பத் தூண்டுகிறது (தானி. 12:1), அதே சமயம் புறஜாதி தேசங்கள் ஒருவரையொருவர் அழிக்க முற்படுகின்றனர் (ஏசா. 66:15, 16; யோவே. 3:2; செப். 3:8; எரே. 25:31-33).

இஸ்ரயேல் பாதுகாப்பாக வசிக்கும் வகையில் நிகழ்வுகள் அனைத்தும் பல ஆண்டுகளாக வடிவமைக்கப் பட்டுள்ளன. எசே. 38:8 இவ்வாறு கூறுகிறது, ‘‘**அநேக நாட்களுக்குப் பிற்பாடு நீ விசாரிக்கப்படுவாய்: பட்டயத்துக்கு நீங்கலாகி, பற்பல ஜனங்களிலிருந்து சேர்த்துக்கொள்ளப்பட்டு வந்தவர்களின் தேசத்தில் பிந்திய வருஷங்களிலே வருவாய்: நெடுநாள் பாழாய்க்கிடந்து, பிற்பாடு ஜாதிகளிலிருந்து கொண்டுவரப்பட்டவர்கள் எல்லாரும் பாதுகாப்பாக குடியிருக்கும் இஸ்ரயேலின் மலைகளுக்கு விரோதமாய் வருவாய்**’’ (Rotherham மொழிபெயர்ப்பு).

திருத்தப்பட்ட நிலையான பதிப்பு (RSV/Revised Standard Version) இவ்வாறு கூறுகிறது: ‘‘**அநேக நாட்களுக்குப் பிற்பாடு நீ விசாரிக்கப்படுவாய்: பட்டயத்துக்கு நீங்கலாகி, பற்பல ஜனங்களிலிருந்து சேர்த்துக்கொள்ளப்பட்டு வந்தவர்களின் தேசத்திற்கு எதிராக பிந்திய வருஷங்களிலே நீ வருவாய்**’’ (எசேக்கியேல் 38:8). இந்த வேதவசனத்தில் ‘‘நீ’’ என்ற வார்த்தையை நாங்கள் இவ்வாறு புரிந்துகொள்கிறோம்: ‘‘கோகு, மாகோகின் தேசம்.’’ கோகு வலிமை வாய்ந்த, பிரம்மாண்டமான, பெருமைக்குரிய அனைத்தையும், ஆம், தேவனுடைய ஜனங்களின் எதிரிகளாக தேசங்களின் தலைவர்களைக் குறிக்கிறது (எசே. 38:2); மாகோகு தேவனுடைய எதிரிகளாக வழிநடத்தப்படும் தேசங்களைக் குறித்துக்காட்டுகிறது. (வெளி. 20:8). ஆம், அர்மகெதோன், அரசின்மை, பல ஆண்டுகளுக்குத் தொடரும், அதன் பின்னர் யாக்கோபின் இக்கட்டின் இரண்டாம் கட்டம் வரும்.

யாக்கோபின் இக்கட்டின் இரண்டாம் கட்டத்தில் அவர்களின் தோல்வி தவிர்க்க முடியாததாக தோன்றும் நேரத்தில் அவர்கள் சார்பாக தேவன் தலையிடுவார். (எசே. 38; 39; சக. 12:1-5; ஒப்பிடுக BS ’78, பக்கம். 15, பகுதி. 2; BS ’79, பக்கம். 7) பலவிதமான வழிகளில் விரைவாக அதிகரித்து வரும் இஸ்ரயேலின் பெரும் செல்வம், ‘‘வெள்ளி மற்றும் தங்கம்’’ மற்றும் ‘‘கால்நடைகள் (ஆடுமாடுகள்) மற்றும் ஆஸ்திகள்’’ என்ற சொற்களால் அடையாளப்படுத்தப் படுகிறது. இந்த ‘‘பெரும் கொள்ளை’’ ஏற்றுமதி சார்ந்த உயர் தொழில்நுட்பத் துறையை உள்ளடக்கியது, இது அதன் பொருளாதாரத்தின் முக்கிய ஆதாரமாகும். இஸ்ரேலிய வைரத் தொழிலானது வைரம் வெட்டுதல் மற்றும் மெருகூட்டல் ஆகியவற்றிற்கான உலகத்தினுடைய மையங்களில் ஒன்றாக இருக்கிறது. இது அனைத்து ஏற்றுமதியிலும் சுமார் 23.2% ஆகும்.

இந்த வேதவசனங்கள் முடிவு காலத்தின் சிறந்த இஸ்ரயேலுக்கான தெய்வீக நியமத்திற்கு நேரடியாக தொடர்புடையவை, - அது, இந்த யுகத்தின் முடிவிலும் அதன் நிறைவேறுதலின் இடமும் இந்த பூமியின் மீது இருக்கிறது. கி.மு. 2045-ல் ஆபிரகாமுக்கு, அவர் வாழ்ந்த தேசம் அவருக்கும், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் இஸ்ரயேல் தேசத்திற்கும் உரியதாகும் என்று தேவன் வாக்குத்தத்தம் அளித்ததாக பழைய ஏற்பாட்டில் ஒரு நிலையான கூற்று உள்ளது. நவீன இஸ்ரயேல் மட்டுமல்ல, உலகில் அண்மையில் உருவாக்கப்பட்ட இறையாண்மை கொண்ட பல தனி நாடுகளும் இணைந்து ‘‘இந்தப் பொல்லாத உலகத்தின்’’ நாடகத்தின் இந்த கடைசிக் காட்சியை நிகழ்த்தும் மேடையை உருவாக்கும் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

எசே. 38:12, ‘‘**தேசத்தின் நடுவில்**’’ ஜீவனின் மையத்தில் என முடிவடைகிறது. உலக அரசாங்கத்தின் நிர்வாக மையமாக, இதைவிட பொருத்தமான இடத்தை காண முடியாது (ஏசா. 2:3) இந்த எதிர்கால பரிசுத்த பூமியின் உண்மையான அளவு மற்றும் எல்லைகளை, தேவனுடைய வார்த்தையில் துல்லியமாக மற்றும் சிறப்பாக வடிவமைக்கப் பட்டு வரையறுக்கப்பட்டுள்ள சட்டத்தின்படி இப்போது நாம் கருத்தில் கொள்கிறோம்.

## ஸ்ட்ராங்ஸ் அகராதியில் (Strongs), கொடுக்கப்பட்டுள்ள அடைப்புக்குறியிடப்பட்ட எண்கள்

**உரிமைப் பத்திரம் #1:** ஆதி. 15:18, ‘‘**எகிப்தின் நதி துவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதுமான இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன் என்றார்.**’’ எகிப்தின் நதி நைல் நஹர் (Nahar) (5104) அதற்கு அர்த்தம் நிரந்தரமாக ஓடும் நீரோடை என்பதாகும். இருப்பினும், எகிப்தின் அதே நதி பற்றிய வார்த்தையானது நாச்சல்(Nachal) (5158) -லிருந்து வரும் வாடி- எல் -அரிஷ் என்ற பருவகால நீரோடையை விவரிக்கிறது. வசனங்கள் (19-21)-ல் பரிசுத்த பூமியுடன் சேர்க்கப்பட வேண்டிய எல்லைகளும், அப்போது இருக்கும் ஜனங்களின் பட்டியலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆம், அவர்கள் தேவனின் ஜனங்களாக இருந்து, தேவன் தங்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்தில் வாழ்வார்கள் (எசே. 36:28). ‘‘**சாலமோன் தனது ராஜ்யத்தின் எல்லைகளை நீண்ட காலத்திற்கு முன்பே தீர்க்கதரிசனமாக கர்த்தர் நிர்ணயித்த முழு வரம்புகளுக்கும் விரிவுப்படுத்தினார்.**’’ (R 5722) என்று ரஸல் போதகர் கருத்துரைத்திருக்கிறார்.

**உரிமைப் பத்திரம் #2:** யாத்திராகமம் 23:31, ‘‘**சிவந்த சமுத்திரம் தொடங்கி பெலிஸ்தரின் சமுத்திரம்வரைக்கும், வனாந்தரம் தொடங்கி நதிவரைக்கும் உன் எல்லை யாயிருக்கும்படி செய்வேன்.**’’ இந்த பத்திரம் தேவனால் மோசே மூலமாக கி.மு. 1815-ல் தென்மேற்கு செங்கடல் பகுதியை கடக்கும் யாத்திரையின்போது கொடுக்கப்பட்டது.

‘‘பெலிஸ்தியர்களின் கடல்’’ Crete- கிரீட் (கேப்டோர்)

பகுதியில் இருந்து மேற்கில் தங்கள் சொந்த தாய்நாட்டுக்காக சோளத்தை வளர்ப்பதற்காக கானான் கடற்கரையில் குடியேறினர்; கிரீட் (Crete) ஆதிக்கம் செலுத்தும் கடல் பகுதியாக இருந்ததினால் இவ்வாறாக பெலிஸ்தியர்களின் கடல் என்று அழைக்கப்படுகிறது. இஸ்ரயேலர் எகிப்திலிருந்து பிரயாணப்பட்ட ஒரு நூற்றாண்டுக்கும் குறைவான காலத்திற்குப் பிறகு, இந்த கடற்பகுதியின் ஆதிக்கமானது, தீரு (Tyre) மற்றும் சிதோன் (Sidon) ஆகியவற்றின் ஃபொனீசியர்களிடம் (Phoenicians) சென்றது, இதனால் அது பெருங்கடல் ஆக மாறியது.

தென்கிழக்கு, பாலைவனம் "மிட்பார்"(Midbar) (4057) சீனாய் (ஐக்கிய அரபு குடியரசு) முதல் பாரசீக வளைகுடா குவைத் (ஏலாம்) வரை.

"ஐபிராத்து" (6578) – நதி கிழக்கு முதல் வடக்கு வரை. இந்த பரந்த நிலப்பரப்பை இஸ்ரயேல் ஒருபோதும் அடையவில்லை, ஏனென்றால் அவர்கள் இன்று போலவே தங்கள் சொந்த பலத்தில் போராடினார்கள்!

**உரிமைப் பத்திரம் #3:** இது, சிறிது காலம் கழித்து வழங்கப்பட்டது. உபா. 1:6-8, "**ஓரேபிலே** [ஹோர்] **நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மோடே சொன்னது என்ன– வென்றால்: நீங்கள் இந்த மலையருகே தங்கியிருந்தது போதும். நீங்கள் திரும்பிப் பிரயாணம் புறப்பட்டு, எமோரியரின் மலைநாட்டிற்கும், அதற்கு அடுத்த எல்லா சமனான வெளிகளிலும் குன்றுகளிலும் பள்ளத்தாக்கு– களிலும், தென்திசையிலும் கடலோரத்திலும் இருக்கிற கானானியரின் தேசத்துக்கும், லீபனோனுக்கும், ஐப்பிராத்து நதி என்னும் பெரிய நதிவரைக்கும் போங்கள். இதோ, இந்தத் தேசத்தை உங்களுக்கு முன்பாக வைத்தேன்: நீங்கள் போய், கர்த்தர் உங்கள் பிதாக்களாகிய ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் அவர்களுக்குப் பின்வரும் அவர்கள் சந்ததிக்கும் ஆணையிட்டுக் கொடுத்த அந்த தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள் என்றார்.**"

"நீங்கள் திரும்பி" (shuwb): திரும்பி செல்லுதல்: யாத்திராகமம் 14:2லிருந்து, "மிக்தோல்"(Migdol) - ஆசியாவிலிருந்து எகிப்தைப் பாதுகாப்பதற்கு "சூர்" மதில் மீதுள்ள கோட்டை. 1 சாமுவேல் 15:7 இவ்வாறு கூறுகிறது, "**ஆவிலா துவக்கி எகிப்திற்கு எதிரேயிருக்கிற சூருக்குப்போகும் எல்லைமட்டும்.**"இந்த மதில் சுக்கோத்தின் வடகிழக்கில் இருந்து பெருங்கடல் வரை இருந்தது.

உபா. 1:7-8, "**நீங்கள் திரும்பிப் பிரயாணம் புறப்பட்டு, எமோரியரின் மலைநாட்டிற்கும், அதற்கு அடுத்த எல்லா சமனான வெளிகளிலும் குன்றுகளிலும் பள்ளத்தாக்குகளிலும், தென்திசையிலும் கடலோரத்திலும் இருக்கிற கானானியரின் தேசத்துக்கும், லீபனோனுக்கும், ஐப்பிராத்து நதி என்னும் பெரிய நதிவரைக்கும் போங்கள்.**"

"எமோரியரின் மலைநாடு"என்பது சவக்கடலுக்கும் யோர்தான் நதிக்கும் கிழக்கே விரிந்திருந்த பீடபூமி ஆகும்.

"சமனான வெளி" (Arabah) என்பது கலிலேயா–விலிருந்து சவக்கடலுக்கு யோர்தான் பாயும் ஆழமான பள்ளத்தாக்கு ஆகும்.

"குன்றுகள்" சமாரியா முழுவதும் (மையப்பகுதி), யூதேயா (கீழ்), கலிலேயா (மேல்) இப்போது மேற்குக் கரையையும் உள்ளடக்கியது.

"பள்ளத்தாக்குகள்" (Ha-Shephelah) மத்திய தரைக்கடல் தெற்கில் உள்ள யோப்பாவிலிருந்து தாழ்வான சமவெளி; (Negeb) காசா தென்கிழக்கு சீனாய்; அகபா வளைகுடா (அரேபியா).

"**கானானியர் தேசம் முதல் லீபனோன் வரை**" என்பது முழு இஸ்ரயேல் நாடு. மேலும் வடக்கு முதல் ஆசியா மைனர் வரையிலும் அதிலிருந்து பெரிய நதி (ஐப்பிராத்து) வரை உள்ள பகுதியாகும்.

**உரிமைப் பத்திரம் #4:** உபா. 11:23-24, "**கர்த்தர் உங்களுக்கு முன்பாக அந்த ஜாதிகளையெல்லாம் துரத்திவிடுவார்: உங்களைப்பார்க்கிலும் ஜனம் பெருத்த பலத்த ஜாதிகளை நீங்கள் துரத்துவீர்கள். உங்கள் உள்ளங்கால் மிதிக்கும் இடமெல்லாம் உங்களுடையதாயிருக்கும்: வனாந்தரத்தையும் லீபனோனையும் தொடங்கி, ஐப்பிராத்து நதியையும் தொடங்கி, கடைசிச் சமுத்திரம்வரைக்கும் உங்கள் எல்லையாயிருக்கும்.**"

"வனாந்தரம் தொடங்கி" (Midbar 4057) என்பது 2-வது உரிமைப் பத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, தெற்கில் அரேபிய பாலைவனம் முதல், வடக்கே லீபனோன் வரைக்கும், கிழக்கில் ஐப்பிராத்து முதல் மேற்கில் கடல் எல்லை வரை (Acharon 314) என எல்லைகளை நாம் காண்கிறோம், எபிரேய வார்த்தையான ஹிண்டர் கடல் (Hinder Sea) என்பது மத்திய தரைக்கடல் ஆகும்.

வேதாகமம் (தேவனுடைய வார்த்தை) முற்பிதாவாகிய ஆபிரகாமின் சந்ததியின் மூலம் ஒரு பெரிய தேசம் உருவாகும் என்று தேவன் வாக்குத்தத்தம் பண்ணியிருக்–கிறார் என்பதை உறுதியாகக் கூறுகிறது என்பதை அறிந்து கொள்வது எவ்வளவு ஆறுதலளிக்கிறது, மேலும் புதிய ஏற்பாடு அந்த வாக்குத்தத்தத்தை மேற்கோள்காட்டி அது சுவிசேஷ யுக அறுவடை வேலையின் முடிவில் நிஜமாகும் என்பதைக் காட்டுகிறது. மேலே விவரிக்கப்பட்டுள்ள நிலமானது எகிப்து, சீனாய், இஸ்ரயேல், லீபனோன், சிரியா, டிரான்ஸ் ஜோர்டான், வடக்கு சவுதி–அரேபியா, மேற்கு ஈராக் அல்லது இன்றைய இஸ்ரயேலை விட 28 மடங்கு பெரியதாக உள்ள பகுதியாக நவீன தேசங்களை தழுவி உள்ளது.

தெய்வீக வரலாற்றில் ஒரு பெரிய நிகழ்வு, ஆபிரகாமை ஊர் என்கிற கல்தேயரின் தேசத்தில் உள்ள தனது வீட்டை விட்டு ஆரானுக்கு (நிலத்தின் வடமேற்கு எல்லை) செல்லும்படி அழைத்த அழைப்பாகும். அங்கிருந்து கானானுக்குச் சென்றார். பின்னர் யாக்கோபு எகிப்திற்குச் சென்று கோசேன் தேசத்தில் குடியேறத் தொடங்கினார் (நிலத்தின் தென்மேற்கு எல்லை.) இங்கிருந்து தான்

இஸ்ரயேலர் இந்த வெறும் கையளவு ஜனங்களிலிருந்து இரண்டு மில்லிய ஜனங்களாக வளர்ந்தார்கள். அவர்கள் ஒரு தேசமாக மாறி, தேசத்தின் எல்லைக்குள் சீனாயில் அவர்கள் நியாயப்பிரமாண உடன்படிக்கையின் மூலம் கி.மு. 1615-ல் தேவனுடன் உடன்படிக்கை உறவில் நுழைந்தனர்.


நாம் இப்போது ஆதியாகமம் 14:18-20-வரையுள்ள வசனங்களைக் கருத்தில் கொள்வோம், "**அன்றியும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டுவந்து, அவனை ஆசீர்வதித்து: வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிராமுக்கு உண்டாவதாக. உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னான். இவனுக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்.**" நாம் இந்த வாக்கியங்களில் ஒரு அடைப்புக்குறி பிரிவைக் கொண்டுள்ளோம், இது விளக்கத்திற்காக இடைநிறுத்துகிறது. இஸ்ரேலில் கண்டெடுக்கப்பட்ட சில கற்பலகைகள் பார்வோனின் அமென்னோஃபிஸ் (Amenophis) மூன்று மற்றும் நான்காம் ஆட்சிக் காலத்தின்பொழுது எகிப்து பாலஸ்தீனத்தின் வசம் இருந்தது என்பதைக் காட்டுகிறது. மெல்கிசேதேக்கிற்கு பின் ஆட்சிக்கு வந்த எபெத்தோபைச் (Ebed-tob) சேர்ந்த ஒருவர், மெல்கிசேதேக்கைப் பற்றி மூன்று முறை பின்வருமாறு கூறுகிறார், "**என்னை இந்த இடத்தில் என் தந்தை அல்ல, என் தாயும் அல்ல, ஆனால் வல்லமையுள்ள ராஜாவே என்னை ஏற்படுத்தினார்.**"

எபிரெயர். 7:1-3, உடன் ஒப்பிடும்போது இது எவ்வளவு அருமையாக இருக்கிறது. "**இந்த மெல்கிசேதேக்கு சாலேமின் ராஜாவும், உன்னதமான தேவனுடைய ஆசாரியனுமாயிருந்தான்: ராஜாக்களை முறியடித்து வந்த ஆபிரகாமுக்கு இவன் எதிர்கொண்டுபோய், அவனை ஆசீர்வதித்தான். இவனுக்கு ஆபிரகாம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்: இவனுடைய முதற்பேராகிய மெல்கிசேதேக்கு என்பதற்கு நீதியின் ராஜா என்றும், பின்பு சாலேமின் ராஜா என்பதற்குச் சமாதானத்தின் ராஜா என்றும் அர்த்தமாம். இவன் தகப்பனும் தாயும் வம்சவரலாறும் இல்லாதவன்: இவன் நாட்களின் துவக்கமும் ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான்.**"

ஆரம்ப காலத்திலிருந்தே, யேகோவா தேவன் தம்முடைய ஜனங்களிடத்தில் கிருபை கூர்ந்து தேவையான நேரத்தில் அவர்களுக்கு ஆறுதல் அளித்தார்: "**உன்னை இரட்சிப்பதற்காக நான் உன்னோடே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்: உன்னைச் சிதறடித்த எல்லா ஜாதிகளையும் நான் நிர்மூலமாக்குவேன்: உன்னையோ நான் நிர்மூலமாக்காமலும், முற்றிலும் தண்டியாமல் விடாமலும், மட்டாய் தண்டிப்பேன்**" என்று கூறுகிறார். (எரே. 30:11). "**இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக**" (மத். 27:25) என்று கூக்குரலிட்ட குற்றமுள்ள தேசத்தாரின் மீது அக்கினியின் ஞானஸ்நானம் வர தேவன் அனுமதித்தார். யோவே. 3:17 இந்த வாக்கியம் இவ்வாறு கூறுகிறது: "**என் பரிசுத்த பர்வதமாகிய சீயோனிலே வாசமாயிருக்கிற நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று அப்பொழுது அறிந்து கொள்வீர்கள்:**" ஓ, யேகோவா தேவன் தம்மால் தெரிந்துக்கொள்ளப்பட்ட ஜனங்களுக்கு எதிராகச் சென்றவர்களின் இரத்தத்தை பழிவாங்குவதன் மூலம் சுத்தம் செய்வார். "**பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்.**" (ரோம. 12:19). யோவே. 3:17-ன் தொடர்ச்சியான வாக்கியம்: "**அப்பொழுது எருசலேம் பரிசுத்தமாயிருக்கும்: அந்நியர் இனி அதைக் கடந்துபோவதில்லை.**" ஒரு வேதாகம அந்நியன் என்பவன் எந்த உரிமையும் இல்லாதவன். மேலும் லேவியராகமம் 25:23, இவ்வாறு கூறுகிறது, "**நிலங்களை அறுதியாய் விற்கவேண்டாம்: ஏனென்றால் தேசம் என்னுடையது** [50 வருட குத்தகையின் முடிவில் எல்லா உரிமையும் உரிமையாளரான தேவனுக்கு திரும்ப வரும்]; **ஏனென்றால், நீங்கள் பரதேசிகளும் என்னிடத்தில் புறக்குடிகளுமாயிருக்கிறீர்கள்.**

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் உறுதியானது; எனவே, அரபியர்களோ அல்லது வேறு எவர்களோ இஸ்ரயேலை அவர்களுடைய நிலத்திலிருந்து வெளியேற்றும் எந்த முயற்சியும் வெற்றி பெறாது. ஆமோஸ் 9:14: "**என் ஜனமாகிய இஸ்ரயேலின் சிறையிருப்பைத் திருப்புவேன்: அவர்கள் பாழான நகரங்களைக் கட்டி, அவைகளில் குடியிருந்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளுடைய பழரசத்தைக் குடித்து, தோட்டங்களை உண்டாக்கி, அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள்.**" இந்த வழியில் இஸ்ரயேலில் நிகழ்த்தப்படும் அற்புதங்கள் உலகையே வியப்பில் ஆழ்த்தியதுடன், அவர்களின் கண்களை இஸ்ரேயலின் மீது வைத்திருக்கிறார்கள். அற்புதமான முன்னேற்றங்கள் நடைபெற்று வருகின்றன, பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தேவன் சொன்ன பல தீர்க்கதரிசனங்கள் இப்போது நம் கண்களுக்கு முன்பாக நிறைவேறி வருகின்றன. ***

**"என் ஜனமாகிய இஸ்ரயேலின் சிறையிருப்பைத் திருப்புவேன்: அவர்கள் பாழான நகரங்களைக் கட்டி, அவைகளில் குடியிருந்து, திராட்சத் தோட்டங்களை நாட்டி, அவைகளுடைய பழரசத்தைக் குடித்து, தோட்டங்களை உண்டாக்கி, அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள். அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன்; நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லையென்று உன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றார்." ஆமோஸ் 9:14-15.**



# சிறுமந்தைக்கான வாக்குத்தத்தங்கள் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்களுக்கும் பொருத்தமானதே

Promises to Little Flock Proper for Consecrated Epiphany Campers

வாக்களிக்கப்பட்ட அழியாமை, தெய்வீக சுபாவம், கிறிஸ்துவுடன் உடன்-சுதந்தரவாளி, சிங்காசனத்தில் ஒரு இடம் மற்றும் மணவாட்டி அங்கத்தினர், ராஜரீக ஆசாரியத்துவம் போன்ற பல வேதவசனங்கள் சிறுமந்தைக்கு மட்டுமே பொருத்தமாக உள்ளன. ஆம், சிறுமந்தையை நேரடியாகவும் முதன்மையாகவும் சுட்டிக்காட்டும் மேலும் பல வேதவசனங்களும் உள்ளன, ஆனால் இதன் மறைமுகமான மற்றும் இரண்டாம் நிலைப் பயன்பாட்டிலும், கொள்கையளவில் பிரயோகிப்பதிலும் இது கர்த்தரின் விசுவாச உண்மைத்துவமுள்ள ஊழியர்களுக்கும் பொருந்தும்.

ஆதி 49:5, சகோதரர்களாகிய சிமியோனும் லேவியும் "**அவர்களுடைய பட்டயங்கள் கொடுமையின் கருவிகளாக**" இருந்ததில் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிறார்கள் என்றும், (வசனம் 6; பார்க்க E.Vol.10, பக்கம் 660, கீழே) அதனால் "சிறுமந்தை, அதைப் பற்றி சிந்தித்து, அவர்களுடன் ஐக்கியம் கொள்ள வேண்டாம் என்றும், அத்தகைய கூட்டத்துடன் அவர்களின் குணாம்சங்களை ஒன்றிணைக்க கூடாது என்றும் மிகவும் வலியுறுத்துகிறது." ஜாண்சன் போதகர் பின்வரும் வாசகத்தைப் பயன்படுத்தினார், "**என் ஆத்துமாவே, நீ அவர்களுடைய இரகசிய ஆலோசனைக்கு உடன்படாதே; என் மேன்மையே, அவர்கள் கூட்டத்தில் நீ சேராதே**"அதன் நேரடி எபிஃபெனி பயன்பாட்டில் தனது கடுமையான மறுப்பைக் காட்டவும், நிகழ்கால கொழித்தல்கள் மற்றும் கொழித்தல்காரர்களுடன் ஒன்றிணைவதற்கும் எதிராக மற்றவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாகவும் இருந்தது. ஜாண்சன் போதகர் இந்த உரையை ஆதி. 49:5-ல் நேரடியாகக் குறிப்பிடப்பட்டதை விட மற்றவர்களுக்கு அடிக்கடி பயன்படுத்தினார்; நாமும் அவ்வாறே செய்கிறோம்.

சத்தியமானது அதன் எதிரிகள் அனைவரையும் வெல்வது உறுதி. நாம் அதை ஆதரித்து, பாதுகாக்கும் போது, ஏசா. 54:17-ன் விலைமதிப்பற்ற வாக்குத்தத்தத்தை கருத்து ரீதியாக நாம் உரிமை கோரலாம்: "**உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போம்; உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய்; இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்தரமும் என்னாலுண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறதென்று கர்த்தர் சொல்லுகிறார்.**"ஏசா. 54:17 பற்றிய ரஸல் போதகரின் கருத்து பின்வருமாறு: "இது ஒரு தனிநபருக்கு மட்டும் பொருந்தாது, மாறாக குறிப்பிடப்பட்டபடி, அது கர்த்தருடைய எல்லா ஊழியக்காரர்களுக்கும் சொந்தமானது - ஒவ்வொரு உண்மையான ஆவிக்குரிய இஸ்ரயேலரும் அதில் உரிமைகோரலாம், மேலும் அதில் இளைப்பாறி, களிகூரலாம்." சந்தேகத்திற்கு இடமின்றி, இது ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு, அதாவது திரும்பக் கொடுத்தலுக்கு முந்தைய பிரதிஷ்டை செய்த ஐந்து வகுப்பார்களுக்கும் சொந்தமானது.

லூக்கா 21:15-ல் உள்ள வாக்குத்தத்தம் சிறுமந்தைக்கு மிக உயர்ந்த அர்த்தத்தில் பொருந்தும், ஆனால் தேவனுடைய பிரதிஷ்டை செய்த ஜனங்களில் மற்றவர்கள் இந்த ஆசீர்வாதத்தை கோருவதற்கும் பெறுவதற்கும் விலக்கப்பட்டுள்ளனர் என்று நாம் நினைக்கக்கூடாது. "**தேவவசனமாகிய ஆவியின் பட்டயம்**" என்னும் சத்தியமே எதிரியின் எல்லா தாக்குதல்களையும் முறியடிக்கிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும் (எபே. 6:17; எபி. 4:12; வெளி. 1:16) - இது நமது சொந்த ஞானம் அல்ல. மேலும், சிலுவை வீரர்களாக இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை எடுத்துப் பிரயோகிக்கும் அளவுக்குத்தக்கதாக, "**உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர்பேசவும், எதிர்நிற்கவும் கூடாத வாக்கும் ஞானமும்**" அவர்கள் பெற்றிருப்பார்கள்.

தேவனுடைய வார்த்தையாலும் அன்றைய ஏற்றகால சத்தியத்தாலும் சர்வாயுத வர்க்கம் தரித்திருந்த மூப்பரான பாத்திரவான்கள், விவாதத்தில் எதிர்க்கமுடியாதவர்களாக இருந்தனர். மேலும், விவாதத்தில் ஈடுபட்ட ஸ்தேவான் ஜெப ஆலயத்தின் ஞானிகளுக்கு அதிகமாக ஓர் இணையற்றவராக இருந்தார். மேலும் "**அவன் பேசின ஞானத்தையும் ஆவியையும் எதிர்த்துநிற்க அவர்களால் கூடாமற்போயிற்று.**" (அப். 6:10). சீர்திருத்தவாதிகள், அந்திக்கிறிஸ்து அமைப்பின் அனைத்து தாக்குதல்களுக்கும் எதிராக தங்களைத் தாங்களே தக்க வைத்துக் கொள்ள முடிந்தது; மேலும், சிறுமந்தை மற்றும் "அறுவடையின் போது சத்தியத்திற்குள் வந்த திரள் கூட்டத்தினர்," ஒன்றாக நடக்கும் போதும் பேசும்போதும், மகா பாபிலோனின் அனைத்து தப்பறைகளையும் எதிர்க்கும் "வாக்கும் வாயும் ஞானமும்" வழங்கப்பட்டது. மேலும் இந்த விரிவாக்கப்பட்ட சுவிசேஷ யுக அறுவடைக் காலத்தில் காலத்துக்கேற்ற காரணமாக சத்தியத்தை மேலும் வெளிக்கொண்டு வரும்போது, தேவனுடைய உண்மையான பிரதிஷ்டை செய்த பிள்ளைகளுக்கு ஓர் "வாக்கும் வாயும் ஞானமும்" கொடுக்கப்பட்டுள்ளது, இது குட்டி பாபிலோனில் (Little Babylon) உள்ள நமது சத்துருக்கள், வாலிபரான

பாத்திரவான்கள் மற்றும் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்கள் மத்தியில் இருந்து வந்த கொழித்தல்–காரர்கள் உட்பட அனைவரும், மறுக்கவோ அல்லது எதிர்க்கவோ முடியாது. பிசாசானவன் தன் தந்திரமான வேலைகளை நடப்பிக்கிறான், ஆனால் ஒரு விசை பரிசுத்தவான்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட விசுவாசம் இன்னும் அசைக்க முடியாததாக உள்ளது. நம்முடைய விசுவாசத்தை நாம் கட்டியெழுப்பும் சத்தியத்தின் ஒவ்வொரு அம்சத்தோடும், ''**இவ்வாறாக கர்த்தர் சொல்கிறார்**'' என்பது சேர்ந்திருந்தால் நாம் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை.

தேவனுடைய இன்றைய உண்மைத்துவமுள்ள ஜனங்களுக்கும் இதே கொள்கை பொருந்தும், ஏனென்றால் தேவன் நமக்கு இவ்வாறு உறுதியளிக்கிறார்: ''**அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்: அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச்செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.**''(ஏசா. 55:11). இன்று பரோஷியா மற்றும் எபிஃபெனி சத்தியத்திற்கு விசுவாசமாக நின்று, ''**பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக போராடுபவர்கள்**'' (யூதா 3), ''**கர்த்தரின் வெளிச்சத்திலே நடப்பவர்கள்**'' (ஏசா. 2:5), சுவிசேஷ யுகத்தில் சிறுமந்தைக்கு இருந்த அதே வகையான ஆசீர்வாதமான அனுபவத்தைப் பெறுவார்கள்; ''**தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?**'' (ரோம. 8:31). தெய்வீக திட்டம் மாறவில்லை, ஆனால் அதைக் குறித்து இன்னும் வெளிப்படையான அறிக்கைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

தேவனுடைய உண்மையும், விவேகமுமுள்ள ஊழியக்காரனான (மத். 24:45), ரஸல் போதகர் பரோஷியாவின் போது அஸ்திபாரங்களைப் போட்டார் மற்றும் ''அந்த [எபிஃபெனி] பாளயத்தினைக் கட்டுவதற்கான ஆயத்தப் பணியை தேவனுடைய ஜனங்களிடையே செய்தார்.'' பைபிள் ஸ்டாண்டர்ட் மினிஸ்ட்ரீஸ் [LHMM] - இயக்கமானது ரஸல் போதகர் மற்றும் ஜாண்சன் போதகர் எழுத்துக்களை நமது தற்போதைய தேவைகளுக்கேற்றவாறு பொருந்தப் பண்ணுவதற்கு சில அவசியமான தழுவல்களுடன், இந்த அஸ்திபார சத்தியங்களைப் பராமரித்து பாதுகாப்பதில் ஜாக்கிரதையுடன் உள்ளது. (PT'54, பக்கம் 59).

## CEC –யின் முன்னுரிமை

பொதுவாக ராஜ்யத்தில் மாம்ச இஸ்ரயேலர்களைக் காட்டிலும் புறஜாதி வம்சாவளியினரின் இன்றைய பிரதிஷ்டை செய்த விசுவாசிகளுக்கு (தேவனால் இஸ்ரயேலர்களாகக் கணக்கிடப்படுகிறார்கள்) முன்னுரிமை அளிக்கப்படும் என்பது ரசல் போதகர் மற்றும் ஜாண்சன் போதகரின் போதனையாக இருந்தது என்பதை மீண்டும் வலியுறுத்த வேண்டும். நாங்கள் PT'72, பக்கம் 15–லிருந்து இதனை மேற்கோள் காட்டுகிறோம், ''புதிய உடன்படிக்கையான, திரும்பக்கொடுத்தல் உடன்படிக்கையின் கீழ், முக்கியமாக புறஜாதிகளை உள்ளடக்கிய வகுப்புகளில் ஒன்றான–வாலிபரான பாத்திரவான்கள் வகுப்பினரின் விஷயத்தில், ''முதலில் யூதருக்கு'' என்ற கொள்கைக்கு தேவன் விதிவிலக்கு அளித்தால் – மற்றொரு வகுப்பினரின் விஷயத்திலும் ஏன் அவர் விதிவிலக்கு அளிக்க முடியாது என்பதற்கான காரணம் நிச்சயமாக இல்லை. பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்கள் என்பது முக்கியமாக புறஜாதிகளை உள்ளடக்கியதாகும், மேலும் இவர்கள் பாவம் உச்சநிலையில் இருக்கும்போது தேவனுக்கு பிரதிஷ்டை செய்வதில் மற்ற வகுப்பாரைப் போலவே விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக இருக்கின்றனர். அது இழந்து போனதைத் திரும்பக்கொடுத்தல் உடன்படிக்கை–யின் கீழ் வருகிறது. வகுப்பினராவர் மேலும் பொதுவான யூதர்கள் மற்றும் திரும்பக் கொடுத்தல் வகுப்பாளர்களின் எஞ்சியவர்களுக்கும் மேலாக அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். மேலும், அவர் இதைத்தான் கேத்தூராளின் மூன்றாவது மகனான மேதானால் அடையாளப்படுத்தப் படுகின்ற பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக் காரர்களுக்கு செய்ய விரும்புகிறார் என்று அவருடைய வார்த்தை காட்டுகிறது, அதேசமயம், தெரிந்தெடுக்கப்பட்டதை போன்ற வகுப்பாரில் யூதர்கள் கேத்தூராளின் நான்காவது மகனான மீதியானால் அடையாளப்படுத்தப்படுகின்றனர்.''

PT '70, pp. 87-90–ல், எருசலேம் கட்டப்பட்டிருந்த மலைகளாகிய – சீயோன் மற்றும் மோரியா ஆகிய இவை முறையே சிறுமந்தை மற்றும் மூப்பரான பாத்திரவான்களைக் குறிக்கின்றன. மேலும் அதன் பர்வதங்களான ஆக்ரா மற்றும் பெசித்தா ஆகியவை முறையே திரள்கூட்டம் மற்றும் வாலிபரான பாத்திரவான்களைப் பிரதிநிதித்துவப்படுத்து–கின்றது. மேலும் அதன் குன்றான ஓஃபேல் – பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்களைப் குறித்துக் காட்டுவதாகவும் கூடுதலாக நாங்கள் சுட்டிக்காட்டுகிறோம், இவர்கள் (CEC) எருசலேமின் பள்ளத்தாக்கு பகுதிகளின் உயரமான மற்றும் தாழ்வான பகுதிகளால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட, தெரிந்தெடுக்கப்பட்டதை போன்ற வகுப்பாரில் எஞ்சியவர்கள் (யூதர்கள் மற்றும் புறஜாதிகள்) மற்றும் தேர்ந்தெடுக்கப்படாதவர்களை விட உயர்ந்த வகுப்பினராக தெளிவாக வேறுபடுத்தப்படுகிறார்கள் (E.Vol.12, p.526; E.Vol.16, பக்கம் 283). ஆயிர வருட ஆட்சியில், ராஜ்யத்தின் பூமிக்குரிய பகுதி ஸ்தாபிக்கப்பட்ட பிறகு, இந்த அடையாள–மான ''மலைகள் மற்றும் சிறிய குன்றுகள், [ஓஃபேல் உட்பட, இது பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்களைக் குறிக்கும்] ஜனங்களுக்கு நீதியின் மூலம் சமாதானத்தைக் கொண்டுவரும்.''

இது இப்படித்தான் இருக்க வேண்டும், ஏனென்றால் தேவன் எப்பொழுதும் உண்மையிலேயே பிரதிஷ்டை செய்தவர்களுக்கு தனது மேலான பொருத்தமான தயவுகளைத் தருகிறார் – அவர்கள் யூத இனத்தைச் சேர்ந்தவர்களாக இல்லாவிட்டாலும், அவரால் அனைவரும் ஆபிரகாமின் சந்ததியாகக் கருதப்படுகிறார்கள்.

ஜாண்சன் போதகர் PT ’49, பக்கம் 128-ல் கூறுவது போல் தேவன் தமது தயவுகளை நிறுத்துகிறார்: ஏனெனில் ஃபிலதெல்பியா மாநாட்டில், ‘‘அனைவரையும் வரவேற்கிறோம்’’ என்ற வார்த்தைகளின் பொதுவான பயன்பாட்டிற்கு விதிவிலக்குகள் உள்ளன என்பதை அவர் இவ்வாறு கூறினார்: ‘‘ஐக்கியத்திலிருந்து நீக்கம் செய்யப்பட்டவர்களைத் தவிர, அனைவரையும் வரவேற்கிறோம்.’’ உண்மையாக பிரதிஷ்டை செய்தவர்களின் உண்மைத் தன்மையை தேவன் மூன்று விஷயங்களால் அளவிடுகிறார்:

**(1)** அவர்கள் பரிசுத்த ஆவியைக் கொண்டிருப்பதன் மாறுபட்ட அளவுகள்,

**(2)** அவர்களின் மாறுபட்ட திறமைகள்

**(3)** அவர்களின் மாறுபட்ட பராமரிப்பின் சூழ்நிலைகள்.

## லவோதிக்கேயா சபையின் காலம் வரையறுக்கப்பட்டது மற்றும் காலவரையற்றது

லவோதிக்கேயாவினுடைய காலத்தின் முடிவைப் பொறுத்தவரை, ஜாண்சன் போதகர் குறிப்பிடுகையில், ‘‘லவோதிக்கேயாவின் காலம் 1874 - 1954 வரையிலான அறுவடை காலமாக இருந்தது-இதில் முதல் 40 வருடங்கள்—பரோஷியா-அறுவடைக்காகவும், இரண்டாவது 40 வருடங்கள்-எபிஃபெனி அறுவடையின் மற்ற செயல்முறைகளுக்காகவும் இருந்தது.’’ (பார்க்கவும்: E.Vol.6, பக்கம் 377; பக்கம் 383, மேல்). தேவனுடைய பிரதிஷ்டை செய்த ஜனங்களைப் பொறுத்த வரையில், லவோதிக்கேயா காலத்தின் கடைசிப் பகுதியும், சுவிசேஷ யுகத்தின் கடைசி சிறப்புக் காலமான எபிஃபெனியும் ஒரே நேரத்தில் முடிவடைவதாகத் தெரிகிறது. 1954-க்கு சில ஆண்டுகளுக்கு முன்பு, அக்டோபர் 22, 1950-ல், சிறுமந்தையின் கடைசி அங்கத்தினர் ராஜ்யத்தின் களஞ்சியத்தில் இணைந்தது, மாம்சத்தில் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் லவோதிக்கேயா நிலை முடிவுக்கு வந்தது, ஆனால் லவோதிக்கேயா சபையின் மற்ற பகுதிகளுக்கு அல்ல. இதில், 1954, லவோதிக்கேயா காலம் மற்றும் எபிஃபெனி காலம் ஆகிய இரண்டிற்கும் ஒரு வரையறுக்கப்பட்ட அர்த்தத்தில் முடிவைக் குறிக்கிறது, ஏனெனில் இங்கு சுவிசேஷ-யுகத்தின் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், வாலிபரான பாத்திரவான்கள் உட்பட, முதல் முறையாக அவர்களின் அங்கத்துவத்தில் நிறைவடைந்து உள்ளனர், மேலும் பெசிலியாவின் முதல் வேலை துவங்குகிறது. (PT ’54, pp.41,42,51-59-ஐப் பார்க்கவும்).

எவ்வாறாயினும், எபிஃபெனி காலம், 1954-ம் ஆண்டில் அதன் வரையறுக்கப்பட்ட அர்த்தத்தில் முடிவடைந்தாலும், மற்ற அர்த்தங்களில் 1954 மற்றும் 1956-க்கு அப்பால் தொடர்கிறது (PT’54, pp.51-54-ஐப் பார்க்கவும்); சபையின் லவோதிக்கேயா நிலையில் எபிஃபெனியே கடைசிப் பகுதியாகும், இது 1954 மற்றும் 1956-க்கு அப்பாலும் தொடர்கிறது. மேலும், திரள்கூட்டம் (உண்மையான சபையின் ஒரு பகுதி-E.Vol.8, பக்கம் 238, 239) மற்றும் வாலிபரான பாத்திரவான்கள் 1954-1956க்குப் பிறகு நிச்சயமற்ற எண்ணிக்கையிலான ஆண்டுகளில் இங்கே இருப்பார்கள் (E.Vol.11,p.493). அவர்களுக்கு லவோதிக்கேயா காலம் 1954-56-க்கு அப்பால் காலவரையின்றி நீட்டிக்கப்பட்டுள்ளது.

லவோதிக்கேயா காலத்தின் போது பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்கள் என்ற வகுப்பாரை தேவன் தனது யுகங்களின் திட்டத்தில் ஏற்றுக் கொண்டார். விரிவாக்கப்பட்ட சுவிசேஷ யுகத்தின் அறுவடை, இந்த ஆயிரம் வருஷத்திற்கு முந்தைய ஆபிரகாமின் ஐந்தாவது வித்தை முன்னோக்கி கொண்டுவருவதில் விடாமுயற்சியுடன் செயல்பட்டு வருகிறது. இந்த வித்து பின்வருமாறு: கம்பு - மூப்பரான பாத்திரவான்கள்; கோதுமை-சிறுமந்தை; வாற்கோதுமை-திரள் கூட்டம்; பெரும்பயறு- வாலிபரான பாத்திரவான்கள்; சிறு பயறு- பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்கள்.

## யூதா 21-ம் வசனத்தை புரிந்துகொள்ளுதல்

‘‘**தேவனுடைய அன்பில் உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்**’’ என்று யூதா 21 நம்மை அழைக்கிறது. அதன்படி, நமது தலைப்பு வசனத்தில் ‘‘உங்களை’’ என்பது சிறுமந்தை, இவர்கள் மட்டுமே பிதாவால் பரிசுத்தப் படுத்தப்பட்டு, இயேசு கிறிஸ்துவுக்குள் அழைக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டவர்கள். அதன்படி, நமது தலைப்பு வசனத்தின் அறிவுரை, கண்டிப்பாகச் சொல்வதானால், சிறுமந்தைக்கு பொருந்தும், ஆனால் கருத்தின் அடிப்படையில் இது சிறந்த வாலிபரான பாத்திரவான்களுக்கும் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்களுக்கும் பொருந்தும். இந்த வசனம் முதன்மையாக அந்த வகுப்பாருக்குப் பயன்படுத்தப்பட்டாலும், கொள்கையளவில் இது இப்பொழுது சுத்தமான வாலிபரான பாத்திரவான்களுக்கும், பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்களுக்கும் பொருந்தும். அவர்கள் அத்தகையவர்களாக இருப்பதால், அவர்கள் தேவனின் அன்பைப் பெற முயல வேண்டும், பின்னர் அதைத் தக்கவைக்க வேண்டும், ஏனெனில் அவர்களின் தற்போதைய அழைப்பு மற்றும் அவர்களின் எதிர்கால வாய்ப்புகள் இவ்வாறு இருக்கிறது; இல்லையெனில், தோல்வி அவர்களுடையதாக ஆகி விடும். ஆகையால், அவர்கள் மீது தேவனுடைய அன்பு இருப்பதால், தேவனுடைய அன்பில் தங்களைக் காத்துக்கொள்வது பயனுள்ளதாக இருக்கும் (PT’85, பக்கம் 25).

## ஆசரிப்புக் கூடாரத்திலிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள்

கர்த்தருடைய ஆடுகளாகிய, பிரதிஷ்டை செய்த பிள்ளைகள், அவருடைய இடைவிடாத மேய்ப்பனுக்குரிய பராமரிப்பின் கீழ் உள்ளனர். அவர் அவர்களை விட்டு விலகவும் மாட்டார், அவர்களை கைவிடவும் மாட்டார்.

“**நீதிமான்களுடைய பாதை நடுப்பகல்வரைக்கும் அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம் போலிருக்கும்.**” (நீதி. 4:18). இந்த சத்தியம் அடையாளமான மேகஸ்தம்பம் மற்றும் அக்கினி ஸ்தம்பத்தினால் நன்கு விளக்கப்பட்டுள்ளது, இது “சுவிசேஷ யுகத்தின் தேவனுடைய ஜனங்களை நிறைவேறுதலான எகிப்திலிருந்து நிறைவேறுதலான கானானுக்கு வழிநடத்திச் செல்லும் திறனில் ஏற்றகால சத்தியமும் அதன் ஆவியும் அடையாளப்படுத்தப்படுகிறது.” (E.Vol.8, பக்கம் 622). “விசுவாசமற்றவர்களுக்கும் மற்றும் குறிப்பிடத்தக்க அளவில் விசுவாசமுள்ளவர்களுக்கும் அவர் சற்றேறக் குறைய இருளாக மாறிப் போகும்பொழுதும், தமக்கு சொந்தமானவர்கள் விஷயத்தில் அவரது பரிசுத்த பர்வதமாகிய ராஜ்யத்திற்கு அவர்களை வழிநடத்துவதற்கு போதுமான அளவு ஏற்றகால சத்தியம் மற்றும் அதன் ஆவியைக் கொடுப்பதில் ஒருமுறைகூட அவர் தவறியதில்லை. இந்த விஷயம் சம்பந்தமாக அவர் ஒருபோதும் தவற மாட்டார்; ‘அது எப்போதும் இருந்தது: அதாவது பகலில் மேகம் அவர்களை மூடியது, இரவில் அக்கினியின் தோற்றம் இருந்தது.’ மேலும், பிரியமானவர்களே, நாம் உண்மையுள்ளவர்களாக இருக்கும் வரை, எப்போதும் நிறைவேறுதலான மேகஸ்தம்பமும், அக்கினிஸ்தம்பமும் தேவனுடைய உண்மையான ஜனங்களின் மத்தியில் அமர்ந்து அவர்கள் மீது எப்போதும் தங்கியிருப்பதை நாம் காண்போம்; தேவன் அதை இவ்வாறு வடிவமைத்துள்ளார்.” (பக்கம் 631, 632).

PT ’34, பக்கம் 53-ல் சிறுமந்தைக்கு ஒரு அழகான சத்தியம் வழங்கப்பட்டது. ஆசரிப்புக் கூடாரத்தை சூழ்ந்துள்ள மேக, அக்கினிஸ்தம்பம், ஏற்றகால சத்தியம் மற்றும் அதன் ஆவியும், கிறிஸ்து வகுப்பாரின் மீது தங்கியிருப்பதை அடையாளப்படுத்துகிறது. சுவிசேஷ யுகம் முழுவதிலும் தேவன் கிறிஸ்து வகுப்பாரை ஏற்றகால சத்தியம் மற்றும் அதன் ஆவியை பெறுபவர்களாகவும் அதன் பாதுகாப்பு களஞ்சியமாகவும் ஆக்கியுள்ளார் என்பதே இதன் பொருள். நிச்சயமாக, ஏராளமான வேதவசனங்கள் இந்த எண்ணத்தை தாராளமாக நிரூபிக்கின்றன, பின்வரும் வசனங்கள் பலவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சிலவற்றைக் காண்பிக்கிறோம்: சங். 25:14; 97:11; 119:66, 99, 100, 130; நீதி. 3:32; ஏசா. 30:18-21; ஆமோ. 3:7; மத். 11:25.

பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்களுக்கான இந்த வாக்குத்தத்தத்தையும், அதன் உரிமையையும் கோல்கி போதகரின் கூற்றோடு PT ’83, பக்கம் 79-ல் நாங்கள் பின்பற்றுகிறோம். “முதற்பேறானவர்களின் சுவிசேஷ-யுக சபை பூமியை விட்டு சென்றிருந்தாலும் நம்முடைய நாட்களில் பிரதிஷ்டை செய்தவர்கள், ‘யுகங்களுக்கு இடையில் பிரதிஷ்டை செய்தவர்கள்’ (R 5761), ஜனங்களைச் சந்தித்து ஆசீர்வதிக்கும் தேவனுடைய வாசஸ்தலமாகவும் இருப்பார்கள். அவர்கள் மீது நிறைவேறுதலான மேக, அக்கினிஸ்தம்பம், ஏற்றகால சத்தியமும் அதன் ஆவியும் வாசமாயிருக்கின்றன, மேலும் அவர்கள் இவைகளின் பாதுகாப்பு களஞ்சியமாக இருக்கிறார்கள்.

ஆக்கப்பூர்வமாக முன்னேற்றமடைந்து வரும் சத்தியத்துடன், மற்றொரு கருத்து PT’84, p.46-ல் கொடுக்கப்பட்டுள்ளது. மேகஸ்தம்பமும், அக்கினி ஸ்தம்பமும் நேரடியாக ஆசரிப்புக் கூடாரத்தின் மீது மட்டுமே தங்கியிருந்தது, அது பிரகாரத்திலோ, பாளயத்திலோ தங்கவில்லை. மூப்பரான பாத்திரவான்களைப் போலவே, தேவன் இப்போது நிறைவேறுதலான பிரகாரத்தில் இருப்பவர்களுக்கும், “உண்மையிலேயே மனந்திரும்பிய விசுவாசிகளுக்கும்,” பிரதிஷ்டை செய்த பாளையத்திலுள்ள தற்காலிகமாக நீதிமானாக்கப்பட்டவர்களுக்கும், பொருத்தமான அறிவொளி பிரகாசத்தையும் ஆசீர்வாதங்களையும் தருகிறார். எபிஃபெனி பிரகாரத்திலும் மற்றும் எபிஃபெனி பாளயத்திலும் பிரதிஷ்டை செய்தவர்கள், மூப்பரான பாத்திரவான்கள் தங்கள் நாட்களில் இருந்ததைப் போலவே, இப்பொழுது தேவனுடைய வாசஸ்தலமாகவும், ஜனங்களைச் சந்திக்கிற, ஆசீர்வதிக்கிற ஸ்தலமாக உள்ளனர். [மேலும் ஆவிக்குரிய தேர்ந்தெடுப்புக்குட்பட்டவர்கள் அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டதால், “யுகங்களுக்கு இடையில் பிரதிஷ்டை செய்தவர்களாகிய,” வாலிபரான பாத்திரவான்கள் மற்றும் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்கள், இந்த பெரிய தயவினைப் பெறுகிறார்கள்.]

“**மாறுபாடுள்ளவன் கர்த்தருக்கு அருவருப்பானவன்: நீதிமான்களோடே அவருடைய இரகசியம் இருக்கிறது.**” (நீதி. 3:32). இதனையும் கவனியுங்கள் சங். 25:9, 10; 32:8; 97:11; 119:130; ஏசா. 30:18; ஆமோ. 3:7; மத். 13:17; 1 கொரி. 10:11. நாம் அனைவரும் நமது இறுதி இளைப்பாறுதலுக்குள் நுழையும் வரை, நிறைவேறுதலான மேக, அக்கினிஸ்தம்பம், தேவனுடைய ஜனங்களைத் தொடர்ந்து வழிநடத்தும் என்பதை இவற்றிலிருந்தும் மற்றும் பிற வாக்குத்தத்தங்களிலிருந்தும் நாம் அறிகிறோம். அது நம்மை வழிநடத்துகிறபடியால் நாம் அனைவரும் அதனுடன் நெருங்கி நடப்போமாக.

திரும்பக்கொடுத்தலுக்கு முந்தைய ஐந்தாவது வகுப்பாருக்குத் [பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்கள்] தேவையான ஆக்கப்பூர்வமான முன்னேற்றமடையும் சத்தியம், சிறுமந்தைக்கு அவர்களின் அபிவிருத்திக்காக கொடுக்கப்பட்ட அடிப்படை சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டது. குறிப்பிட்ட வேலை 40 - ஆண்டுகள் பரோஷியாவிலும் 40-ஆண்டுகள் எபிஃபெனியிலும் நிறைவடைந்தது என்பதை நாம் கண்டறிந்துகொள்ள வேண்டும். நாம் பெசிலியாவிற்குள் 70 ஆண்டுகள் வந்திருக்கிறோம் என்பதையும் நாங்கள் கண்டறிந்து கொள்கிறோம், இன்னும் அவருடைய நாமத்திற்கான ஜனங்களைக் கூட்டி சேர்க்கும் பணி தொடர்கிறது; இது விரிவாக்கப்பட்ட சுவிசேஷ யுக அறுவடை என்ற சொல்லைப்

பயன்படுத்த நம்மை அனுமதிக்கிறது. 1954 முதல், அறியப்படாத எண்ணிக்கையிலான, பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்களுக்கான விசேஷ அழைப்பு நடந்து வருகிறது; மேலும் இதுவரை, இந்த தேர்ந் தெடுக்கப்பட்ட அழைப்பு தொடர்கிறது என நாம் புரிந்துகொள்கிறோம். ஒரு அழைப்பு முன்னோக்கி சென்று கொண்டிருக்கிறது என்ற உண்மையை நாம் ஏற்றுக் கொள்ளும் போது, ஒரு செய்தியும் கட்டாயம் இருக்க வேண்டும் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். மூப்பரான பாத்திரவான்கள், சிறுமந்தை, திரள்கூட்டம் மற்றும் வாலிபரான பாத்திரவான்கள் ஆகியோருக்கு முன்னர் வழங்கப்பட்டதைப் போல, ஆக்கப்பூர்வமாக முன்னேற்றமடையும் சத்தியம் [குறிப்பாக CEC-யின் தேவைகளுக்கு] கிடைக்கும் என்பதை இது நமக்கு உணர்த்துகிறது.

கர்த்தருடைய போதனைகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் எதிராக கலகப் புரட்சி செய்தவர்கள், சிறுமந்தையின் அழைப்பிற்கான தங்கள் நிலைப்பாட்டை இழந்தார்கள் என்பது நாம் புரிந்து கொள்வதற்காக கொடுக்கப் பட்டிருக்கிறது. கொள்கையளவில், இது ஒரு வாலிபரான பாத்திரவானுக்கும் அல்லது ஒரு பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரருக்கும் பொருந்தும். ''**ஏனென்றால், தேவனுடைய வார்த்தைகளுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணி, உன்னதமானவருடைய ஆலோசனையை அசட்டைப்பண்ணினார்கள்.**'' (சங்.107:10; PTQ புத்தகம் பக்கம் 253, par.2).

## அக்கினி போன்ற சோதனைகள் எதிர்பார்க்கப்படுகின்றன

நாம் தேவனுடைய குமாரர்களாக இருப்பது எந்த அளவுக்கு நிச்சயமோ அந்த அளவுக்கு [பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்கள்] நாம் அவைகளைப் பெறுவோம்; மேலும் அவைகள் வரும்போது, நம்மிடம் அவைகள் செய்த வேலையை நாம் உடனடியாக அங்கீகரித்து, தேவபக்தியையும், தெளிவையும், ஆழ்ந்த மற்றும் உற்சாகமான பக்தியையும் அவைகள் நமக்குப் பயிற்சி அளிக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். ''**எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்**'' (எபி. 12:11), ''கிறிஸ்துவின் பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால்''(1பேது. 4:12,13). இது பாவநிவாரண பலியில் பங்குபெறும் சிறுமந்தையின் பாடுகளைக் குறிக்கிறது, ஆனால் கருத்தின் அடிப்படையில், கிறிஸ்துவின் நிமித்தம் பாடுபடும் தேவனுடைய பிரதிஷ்டை செய்த ஜனங்கள் அனைவருக்கும் இது பொருந்தும். தெரிந்தெடுக்கப்பட்டதை போன்ற வகுப்பார் (Quasi-Elect) யோவேல் 2:28 மற்றும் ஏசா. 60:14-ன்படி, ஆயிர வருட ராஜ்யத்தில் ''குமாரர்களாக'' இருப்பார்கள், மேலும் ஊழியத்தின் பல சிலாக்கியங்கள் வழங்கப்படும். இது குறிப்பாக பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக் காரர்களுக்கு உண்மையாக இருக்கும். (PT '02, பக்கம் 43; PT '12, பக்கம் 5; PT '16, பக்கம் 22).

## தேவன் நமக்கு எப்படி கூடுதலான பெலத்தைத் தருகிறார்

நாம் அவருக்காகக் காத்திருக்கும்போதும், ஏற்கனவே கொடுக்கப்பட்ட பெலத்தைப் பிரயோகிக்கும் போதும் தேவன் நம்மை தமது வார்த்தையின் மூலம் பெலப்படுத்துகிறார். மேலும் அவர் தமது ஆவியினாலும் நம்மை பெலப்படுத்துகிறார். இதன் மூலமாக நாம் ஆவியை தேவனுடைய வல்லமை என்று அர்த்தப்படுத்துவதில்லை, ஏனென்றால் அந்த வார்த்தையின் அர்த்தம், தேவனுடைய வார்த்தையில் உள்ள ஆற்றலாகும்; மாறாக ஆவியால் தேவன் நம்மை பெலப்படுத்தும் ஒரு வாய்க்காலாக, நம்மில் உள்ள அவரது மனப்பான்மையை குறிப்பிடுகிறோம். முதலாவதாக புது சித்தமாகவும், இரண்டாவதாக, தேவன் தம்முடைய புது சிருஷ்டியான ஜனங்களுக்கு ஆவியினால் – ஜெனிப்பித்தல் மூலம் கொடுக்கும் பரிசுத்த வல்லமை–யாகவும் இங்கு அர்த்தப்படுத்துகிறோம், மேலும் அவரது வாலிபரான பாத்திரவான்கள் மற்றும் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்களுக்கு அவர்களின் பிரதிஷ்டை–யின் போது அவரது சாயலில் அவர்களைப் புதுப்பிக்கத் துவங்குவது, மூன்றாவதாக, புது சித்தத்தை மேலே குறிப்பிடப்பட்ட பரிசுத்த வல்லமைகளைப் பயன்படுத்துவதன் மூலம் அவர்களில் உருவாகும் குணமாகவும் அர்த்தப் படுத்துகிறோம். இறுதியாக, தேவன் தம் ஜனங்களைப் அவரது பராமரிப்பின் மூலம் பெலப்படுத்துகிறார், அதாவது, வசனத்தால், ஆற்றலளிக்கப்பட்டு, அறிவொளியால் பிரகாசிக்கப்பட்டு, தங்கள் பரிசுத்த ஆவியின் செயல்–பாட்டைக் கோரும் அனுபவங்களுக்கு மத்தியில், தங்கள் மனங்கள், இருதயங்கள், கிருபைகள், மற்றும் விருப்பங்–களை பயிற்சி செய்ய அவர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவது போன்ற அப்படிப்பட்ட சூழ்நிலைகளை அவர் உருவாக்குகிறார்.

பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்கள், பிரகாரத்தின் வாசலில் உள்ள உலகின் பிரதான ஆசாரியாருக்கு முன் காணிக்கைகளை ''கொண்டு வருபவர்கள்'' அல்லது காணிக்கைகளை வழங்குபவர்கள் என தேவனால் கருதப்படுகின்றனர். இருப்பினும் இந்த அடையாளம், மத்தியஸ்த ஆட்சி தொடங்கும் வரை உண்மையில் நிறைவேறாது. விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்ட பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்கள், நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் பங்கேற்பார்கள், ''**நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும்.**'' (லூக். 14:14). பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்கள் நிறைவேறுதலான மிரியாமின் முக்கியப் பகுதியாவார்கள், மேலும் அவர்கள் ஆயிர வருட ஆட்சிக்கு பிந்தைய காலத்தில், பூரணப்படுத்தப்பட்ட பூமியில்

உள்ள இழந்து போனதைத் திரும்பபெறும் வகுப்பாரிடையே கனத்துக்குரிய நிலையைக் கொண்டிருப்பார்கள் (E.Vol.11, பக்கம் 293).

ஜாலி போதகர் இந்த எண்ணங்களை 1968-ல் வெளிப்படுத்தினார்: சிறுமந்தையின் புது சிருஷ்டிக்கு கொடுக்கப்பட்ட பல வார்த்தைகள், திரள்கூட்டத்தில் உள்ள புது சிருஷ்டிக்கும் பொருந்தும். சிறுமந்தைக்கு மட்டுமே நேரடியாக பொருந்தக்கூடிய, அவர் நம்மை சிறுமந்தையே என அழைக்கும் பாடலை, நாம் எவ்வாறு பயன்படுத்த முடியும்? நீங்கள் திரள்கூட்டத்திலோ அல்லது வாலிபரான பாத்திரவான்கள் வகுப்பிலோ இருந்தால், பொதுவான உலகத்துடன் ஒப்பிடும் போது கர்த்தருடைய ஜனங்கள் மிகக் குறைவானவர்கள் என்று நீங்கள் கூறலாம்.

ஆம், நாங்கள் சிறுமந்தை, கருத்தின் அடிப்படையில் சிலர் மட்டுமே; எனவே சிறுமந்தைக்கு நேரடியாகப் பொருந்தும் பல விஷயங்களை நாம் எடுத்து நமது நலனுக்காக பயன்படுத்தலாம். பல மன்னா வாக்கியங்கள், நாம் பாடும் பல பாடல்கள் மற்றும் கவிதை புத்தகத்தில் உள்ள கவிதைகள், சிறுமந்தையை நேரடியாகக் குறிப்பிடுகின்றன; ஆனால் அவற்றிலிருந்து சில அற்புதமான பாடங்களை நாம் கற்றுக் கொள்ளலாம். உதாரணமாக, 2 பேது. 1:4, "**திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது**" என்ற வசனத்தை எடுத்துக் கொள்ளுங்கள்; சிறுமந்தையைச் சேர்ந்தவர்கள் அல்லாத நீங்கள் அந்த வசனத்தை எப்படி படிக்கப் போகிறீர்கள், அது நம் அனைவரையும் உள்ளடக்கியது, நமக்கான ஆசீர்வாதங்களைப் பெற அந்த வசனத்தை நாம் எவ்வாறு பயன்படுத்தப் போகிறோம்; "நமக்கு" மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் உள்ளன, இவற்றின் மூலம் நாம் பரிபூரண ஜீவனின் பங்காளிகளாக மாறலாம். ஆவியில் ஜெனிப்பிக்கப்படாத, பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளையக்காரர்கள் இவ்வாறு கூறுவர்: ஓ, ஆம், நாம் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடி, நித்திய ஜீவனைப் பற்றிக் கொண்டால், நமக்கு மகா மேன்மையும் விலையேறப் பெற்றதுமான வாக்குத்தத்தங்கள் உள்ளன; மேலும் அவை நம் ஒவ்வொருவருக்கும் பொருந்தும். எனவே நான் இந்த வசனத்தை எனக்கு ஏற்றபடி பொருந்தச் செய்து கொள்வேன்.

புது சிருஷ்டியானது பழைய சிருஷ்டியை – சரீரத்தைக் கீழ்ப்படுத்தி வைத்திருக்க வேண்டும். அதன் சித்தமானது மரித்து, புதைத்து, கீழ்ப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். (1கொரி. 9:27). "**மாம்சத்தின்படி** [புது சிருஷ்டிகள்] **பிழைத்தால் சாவீர்கள்** [புது சிருஷ்டிகளாக ஜீவனை இழக்கவும்- இரண்டாம் மரணத்தில் மரிக்கவும்]: **ஆவியினாலே** [மரணத்திற்கு] **சரீரத்தின் செய்கைகளை** [மனித இயல்பின் தன்மை, அதை கட்டுப்படுத்த அனுமதிக்கக்கூடாது] **அழித்தால் பிழைப்பீர்கள்** [புது சிருஷ்டிகளாக]. இந்த வேதவசனம், மற்ற பல வேத வசனங்களைப் போலவே, புது சிருஷ்டிகளுக்கு நேரடியாகப் பிரயோகப்படுத்தக்கூடிய அதே வேளையில், அவர்கள் ஆவியால் ஜெனிப்பிக்கப் படாவிட்டாலும், தங்கள் ஜீவனை தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்த மற்ற அனைவருக்கும் கருத்தின் அடிப்படையில் பொருந்தும். தேவனோடு ஒருவர் நடப்பதற்கு, ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்ட புது சிருஷ்டியாக இருக்க வேண்டிய அவசியமில்லை. "**ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்தான்:**" அவன் தேவனுக்குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சி பெற்றான். (ஆதி. 5:24; எபி. 11:5).

மூப்பரான பாத்திரவான்களில் ஒருவரும் ஆவியி-னால் ஜெனிப்பிக்கப்படவில்லை. அவர்கள் புது சிருஷ்டி-களாக இருக்கவில்லை, ஆனால் அவர்கள் தேவனுடன் அவருடைய சிநேகிதர்களாக ஐக்கியம் கொண்டிருந்தனர் – அவர்கள் விசுவாசத்தால் தேவனோடு நடந்தார்கள், மேலும் அவர்களை நீதிமானாக்குவதற்காக இயேசுவினுடைய வரவிருக்கும் பலியைக் கருத்தில் கொண்டு அவர்களுடைய விசுவாசம், அவர்களுக்கு நீதியாக எண்ணப்பட்டது, (யாத். 33:11; ஏசா 41:8; யாக். 2:23; ரோம. 4:3, 5, 9, 13, 20 - 22; கலா. 3:6) "**விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்.**"(எபி. 11:6). நமக்கான கிறிஸ்துவின் பலியின் புண்ணியத்தின் மூலம், தேவன் நம்மை மீண்டும் அவரோடு ஐக்கியத்திற்குள் ஏற்றுக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறார் (யாக். 4:8; 1 யோவா. 1:3). விசுவாசத்தின் ஆசீர்வாதமான விசுவாச நடையினால் நாம் அவருடன்கூட நடக்கிறோம்; "**நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்.**" (2 கொரி. 5:7). "**அந்தப்படி விசுவாசமார்க்கத்தார் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்.**" (கலா. 3:9).

மத்.10:22, "**ஆனால் முடிவுபரியந்தம் நிலைத் திருப்பவனே இரட்சிக்கப்படுவான்.**" கர்த்தரை மிக உயர்வாக நேசித்து அதன் காரணமாக அவருடைய ராஜ்யத்தில் ஓர் இடத்தை பெறுபவர்களின் அன்பானது, வழியில் சோதனைகள் மற்றும் கவர்ந்திழுக்கும் சோதனைகளால் பரீட்சிக்கப்படும் என நாம் [பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்கள்] உறுதியளிக்கப்பட்டிருக்கிறோம். எல்லா சோதனைகள், கவர்ந்திழுக்கும் சோதனைகள் மற்றும் சிரமங்கள் ஆகிய அனைத்திலிருந்தும் தப்பிப்பவர், உண்மையில் தேவனுடன் ஒரு குமாரனாக உறவிலிருக்-கிறாரா என்று சந்தேகிக்க எல்லா காரணங்களும் உள்ளன. அவர் ஒரு குமாரனாக இருந்தால், தேவன் நிச்சயமாக அவருக்கு சோதனைகள் மற்றும் ஒழுக்கப் பயிற்சியின் அனுபவங்களைக் கொடுப்பது அவசியம் என கருதுவார்.

நீடிய பொறுமை, பெலம் மற்றும் சகிப்புத்தன்மை போன்ற குணநலன்கள் கொண்டவர்களையே கர்த்தர் தனக்காகத் தெரிந்தெடுக்கிறார். கர்த்தருடைய சந்நிதியில் நடக்கிறவர்கள் சிலர் இருக்கிறார்கள்; அவர்களை எதிராளியின் எந்தச் சூழ்ச்சியும் தந்திரமும் அவரை விட்டு

தள்ளிவிடமாட்டாது. அவர்கள் இருதயத்தில் தங்களுக்கு சொந்தமானவர்கள் அல்ல, முழுவதுமாக கர்த்தருடையவர்கள். தேவனுடைய சித்தத்தைத் தவிர வேறு எந்த விருப்பமும் இல்லாததால், கர்த்தர் எங்கு வழிநடத்தினாலும் அவர்கள் பின்பற்றுவார்கள். இவர்கள் தற்கால வாழ்வில் சோதனை, ஒழுக்கப் பயிற்சி மற்றும் பரீட்சை என்ற நெருக்கமான பாதையில் கர்த்தரைப் பின்பற்றுவார்கள், மேலும் அவர் சிறுமந்தையைப் பற்றி அறிவித்தபடி, "**அவர்கள் பாத்திரவான்களானபடியால் வெண்வஸ்திரந்தரித்து என்னோடேகூட நடப்பார்கள்.**" (வெளி. 3:4). திரள் கூட்டமும் இறுதியில் "**வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில்** [வெற்றியின்] **குருத்தோலைகளைப் பிடித்திருப்பார்கள்.**" (வெளி. 7:9,13); மேலும் அதே ஆசீர்வாதம் கருத்தின் அடிப்படையில், கர்த்தருக்கு செய்துள்ள தங்கள் பிரதிஷ்டையில் உண்மைத்துவமுள்ளவர்கள் மற்றும் அதன் விளைவாக பரிசுத்த குணாம்சங்களைக் கொண்ட அனைவருக்கும் பொருந்தும்.

கிறிஸ்துவின் சத்தியமும் நீதியும் நிறைந்த ஆட்சி ஸ்தாபிக்கப்படுவதை முன்னிட்டு, இயற்கையின் இயல்பான சக்திகள் தங்களைத் தாங்களே சரிசெய்து கொண்டு, தற்போதைய பொல்லாத வானங்களும் (மத சம்பந்தமான அதிகாரங்கள்) பூமியும் (சமுதாய ஒழுங்கு) ஒழிந்து போவதை நாம் காணும்போது, ஆண்டவருடைய பிரதிஷ்டை செய்த ஜனங்களாகிய நாம் எத்தகைய மனப்பான்மையைக் கொண்டிருக்க வேண்டும்? இன்னும் கொள்கையளவில் பொருந்தும், அவருடைய வார்த்தைகளுக்கு நாம் செவிசாய்க்க வேண்டும்: "**கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்: இவைகளெல்லாம் சம்பவிக்க வேண்டியதே**" (மத். 24:6). நாம் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்தைப் பற்றி குறிப்பாகப் பேசுகையில், அவர் "**மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின்மேல்** [மகா உபத்திரவ காலம்] **வருவார்,**" மேலும் "**அத்திமரத்தையும்** [யூத தேசம்] **மற்றெல்லா மரத்தையும்** [இன்னும் பல தேசங்கள், உதாரணமாக ஆப்பிரிக்கா] **பாருங்கள்,**" "**அவைகள் தளிர்க்கிற போது** [சுதந்திர நாடுகளாக உருவாகும் போது]," இயேசு நம்மிடம் இவ்வாறு கூறினார், "**நீங்கள் நிமிர்ந்து பார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்: ஏனெனில் உங்கள் மீட்பு சமீபமாயிருக்கிறது... அப்படியே இவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்போது, தேவனுடைய ராஜ்யம்** [பூமியில்] **சமீபமாயிற்றென்று அறியுங்கள்.**" (லூக். 21:25-33).

ஜெனிப்பிக்கப்படாத பிரதிஷ்டை செய்த ஊழியர்களும் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கின்றனர், அதாவது, தங்கள் காலங்களில் ஏற்ற காலத்துக்கேற்ற சத்தியத்தைக் காண்பது எப்போதும் பிரதிஷ்டை செய்தவர்களின் சிலாக்கியமாகும். (PT'84, பக்கம் 23). பிரதிஷ்டை செய்த அனைவருக்கும் எல்லா காலங்களிலும் சத்தியம் உரித்தானது என்று வேதவாக்கியங்கள் போதிக்கின்றது (E.Vol.15, பக்கம் 653).

## தேவையான பலம்

*எங்கும் பாறைகள் அங்கே சுற்றிலுமாக கிடந்த*
*மலையின் பக்கமாக நான் அலைந்து திரிந்தேன்;*
*ஒரு சிறு வெடிப்பில் அங்கே*
*சிறிய மரமொன்றை நான் கண்டேன்*

*குளிர்ந்த சாம்பல் நிறப் பாறைகளுக்கிடையே*
*நசுக்கப்பட்டிருந்தாலும்*
*அந்த மரக்கன்று ஓர் மரமாக வளருவதற்கு இன்னும் தொடர்ந்து*
*முயற்சி செய்து கொண்டிருந்தது;*
*அதன் கிளைகள் வானத்தை நோக்கி வந்தடைந்தது.*


*"நீ முயற்சியை விட்டுவிடலாம்;" உனக்கான*
*வாய்ப்புகள் குறைவாகவே இருக்கின்றன;*
*இத்தகைய இடர்பாடுகளுக்கு எதிராக;*
*நீ வீணாகவே முயற்சி செய்கிறாய் -*
*வாழ்வானது உனக்குச் சாதகமாக இல்லை"*
*என்று நான் சொன்னேன்*

*வருடங்கள் உருண்டோடின, மீண்டும் ஒருமுறை*
*அந்த நிலத்தினூடாக நான் அலைந்து திரிந்தேன்;*
*அந்த பிளவில் நான் கண்டது*
*இதோ உயரமும் கம்பீரமுமான ஒரு மரம்*

*நான் கிட்டிச் சேர்கையில்,*
*பாறைகள் ஒதுக்கித் தள்ளப்பட்டிருந்ததை நான் கண்டேன்,*
*ஒரு சமயம் மிகவும் சிறியதாயிருந்த பிளவானது*
*பல அங்குலங்களுக்கு விரிவாயிருந்தது*

*அப்போது நான், "அந்த விதையை*
*உருவாக்கிய தேவனானவர்,*
*ஒவ்வொரு தேவைக்கும் ஏற்ற பெலத்தை*
*அந்த சிறிய வடிவத்துக்குள் வைத்திருப்பார்"*
*என்பதை "நான் அறிந்திருந்திருக்க வேண்டும்"*
*என்று முனகினேன்.*

*இவ்வாறாக ஒரு மரத்தினைப் பற்றி அக்கறை கொள்ளும்*
*நம் பிதாவின் பராமரிப்பை நாம் எப்படி சந்தேகிக்க முடியும்?*
*நாம் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கேற்ப*
*தமது பிள்ளைகளுக்கான பெலத்தை*
*கொடுக்காமலிருப்பாரா?*



# கிரியை செய்யும் விசுவாசம்

The Faith that works

**"நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன்" (யாக்.2:18).**

பல வேதாகம மாணவர்கள், விசுவாசம் மற்றும் கிரியைகளைப் பற்றிய அப்போஸ்தலர் பவுலின் போதனைகளுக்கும், அப்போஸ்தலர் யாக்கோபின் போதனைகளுக்கும் இடையே கருத்து முரண்பாடு இருப்பதாகக் கருதுகின்றனர். இருப்பினும், சரியாகப் புரிந்து கொண்டால், அவர்களின் போதனைகள் முழுமையாக இணக்கமுள்ளவைகளாகக் காணப்படுகின்றன. யூத நியாயப்பிரமாண உடன்படிக்கையானது கிரியைகளின் உடன்படிக்கையாக இருந்தது, அதே சமயம் கிருபையின் கீழ் ஏற்றுக்கொள்வதற்கு அடிப்படையானது விசுவாசம். (ரோம. 6:14). நியாயப்பிரமாணமானது, பிரமாணத்தை கைக்கொள்ளுங்கள், ஜீவனடையுங்கள் என்கிறது; சுவிசேஷமானது, விசுவாசித்து ஜீவனடையுங்கள் என்கிறது.

அப்போஸ்தலனாகிய பவுல், நியாயப்பிரமாணத்தின் தேவைகளை உண்மையாக நிறைவேற்றுவதின் வெகுமதியாக நித்திய ஜீவனை எதிர்பார்க்கும்படி நியாயப் பிரமாணத்தை அறிந்தவர்களுக்கும் அதன் கீழ் பயிற்றுவிக்கப்பட்டவர்களுக்கும் எழுதுகையில், ஆதாமின் வீழ்ந்துப்போன வகுப்பார் அந்த நியாயப்பிரமாணத்திற்கு முழுமையாக கீழ்ப்படிவது சாத்தியமற்றது என்பதைக் காட்ட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்று எழுதுகிறார். எனவே, **"எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியையினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப் படுவதில்லை."** (ரோம.3:20). அப்படியானால், நீதிமானாக்கப்படுதலையும் நித்திய ஜீவனையும் நியாயப் பிரமாணத்தின் கிரியைகளின் மூலமாக பெற முடியாது என்றால், பிறகு அவை எவ்வாறு பெறப்படும்? நம்முடைய கர்த்தராகிய இயேசு முழு நியாயப்பிரமாணத்தையும் குற்றமற்ற முறையில் கடைப்பிடித்தார் என்பதையும், "அவற்றைச் செய்கிறவர்களுக்கு" வாக்களிக்கப்பட்ட சகல வெகுமதிகளையும், அதாவது நித்திய ஜீவனின் வெகுமதிகளையும் அதன் அனைத்து தெய்வீக ஆசீர்வாதங்களையும் அவர் பெற்றிருக்கிறார் என்பதையும் அப்போஸ்தலர் காட்டுகிறார்.

விழுந்துபோன மனுக்குலத்தார் எவரும் நியாயப் பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் நித்திய ஜீவனை பெறலாம் என்று எதிர்பார்க்க முடியாது, ஆனால் அவர்கள் விசுவாசித்து அதை வேறு வழியில் பெறலாம் என்று அப்போஸ்தலன் மேலும் காட்டுகிறார் – நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் சரியானதாக அங்கீகரிக்கப்படும் கிரியைகளைச் செய்வதின் மூலம் அல்ல, ஆனால் தேவனுடைய கிருபையின் கீழ் அவர்களை அங்கீகரிக்கும் விசுவாசத்தின் மூலம் செய்யலாம். (ரோம. 5:1,2). மேலும்




நியாயப்பிரமாணத்தின் முழு கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதிலிருந்து அவர்களைத் தடுத்துள்ள அவர்களின் வீழ்ச்சியடைந்த சுபாவங்களின் அனைத்து குறைபாடுகளையும் அபூரணங்களையும் ஈடுசெய்ய அவசியமான கிறிஸ்துவின் நீதியால் மூடுவதற்கான அளவுக்குத்தக்கதாக அது அவர்களுக்கு பாதுகாப்பான தாகும். ரோம. 8:4 கூறுகிறது: **"மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்."**

அறிவார்ந்த ஏற்றுக்கொள்ளுதல் மட்டுமே போதுமானது என்று அர்த்தப்படுத்தும்படி ஒரு முறை கூட அப்போஸ்தலர் பவுல் கூறவில்லை. அவருடைய போதனைகள் இந்தப் பாடத்தில் யாக்கோபினுடைய வாக்கியங்களுடன் முழுமையாக ஒத்துப்போகின்றன, நீதியையும் பரிசுத்தத்தையும் நோக்கி எந்த விளைவையோ அல்லது கிரியைகளையோ உருவாக்காத ஒரு விசுவாசம் ஓர் செத்த மற்றும் மதிப்பற்ற விசுவாசமாக இருக்கும்; அல்லது மோசமாக, கண்டனம் செய்யும் விசுவாசமாக இருக்கும்.

யாக்கோபு அப்போஸ்தலர் விசுவாசத்தை புறக்கணிப்பதாக புரிந்துக் கொள்ளக்கூடாது, மேலும் நியாயப் பிரமாணத்தின் கிரியைகள் பாவிகளை நீதிமான்களாக ஆக்க ஏற்றதாக அல்லது போதுமானதாக இருக்கும் என்றும் அவர்களை நித்திய ஜீவனுக்கான சுதந்தரவாளிகளாக்க முடியும் என்றும் கற்பிப்பதாக புரிந்து கொள்ளக்கூடாது. ஆதிக்கால சபையில் சிலர், விசுவாசிக்கிற ஒவ்வொருவருக்கும் நீதிக்கான நியாயப்பிரமாணத்தின் முடிவு கிறிஸ்து என்பதை உணர்ந்து, மேலும், "அவருடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினால் நாம் நீதிமானாக்கப்படுகிறோம்" என்றும், இன்று சிலர் செய்வது போல, விசுவாசத்தை மட்டும் காத்துக்கொண்டு, ஜீவியத்தின் நடத்தை முக்கியமற்றது என்று கூறி, தீவிர எதிர்முனைக்குச் செல்ல வாய்ப்புள்ளது. யாக்கோபு அப்போஸ்தலர் இந்த நிருபத்தை எழுதும் போது, இந்த வகையான வகுப்பாரை மனதில் வைத்திருந் திருக்கலாம். எனவே அவர் இந்த கருத்தில் வாசிக்கிறவரை

பாதுகாக்கிறார் - வெறும் நம்பிக்கை, இருதயத்திலும் ஜீவியத்திலும் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்றும், மேலும் அது தேவனுடைய பார்வையில் பிரியமாக வாழ எந்த விதமான முயற்சியும் அதனோடு சேர்ந்து இல்லை என்றும், அது ஏதேனும் உயிரூட்டமான விசுவாசமாக இருக்கும் என்றோ அல்லது அது உண்மையான நன்மையை செய்யும் என்றோ நினைக்க வேண்டாம். மாறாக, அது பிசாசுகள் கொண்டிருக்கும் ஒருவகை நம்பிக்கையாக இருக்கும்.

## ஆபிரகாமின் விசுவாசம் கிரியைகளால் வெளிப்படுத்தப்பட்டது

ஆபிரகாம் விசுவாசிகளின் தகப்பன் என்று அழைக்கப்படுகிறார்; மற்றும் அவரைக் குறித்து எழுதப் பட்டுள்ளது (ரோம.4:3; யாக்.2:23), ''**ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது.**'' ஆனால், அப்போஸ்தலர் குறிப்பிடுவது போல (யாக். 2:21), ''**தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின்மேல் செலுத்தினபோது**'' ஆபிரகாம் கிரியைகளினாலே நீதிமானாக்கப்பட்டான். அவருடைய விசுவாசமானது நல்ல கிரியைகளுக்கும் கீழ்ப்படிதலுக்குமான எந்த கனியையும் தராத வகையைச் சேர்ந்ததல்ல. மாறாக, தேவன் ஆபிரகாமின் விசுவாசத்தை பரீட்சித்தார், அவருடைய விசுவாசமானது கீழ்ப்படிதலின் கிரியைகளால் ஏற்றுக் கொள்ளப்படத்தக்க ஒன்றாக நிரூபிக்கப்பட்டது; விசுவாசமும் கிரியைகளும் அவருடைய விஷயத்தில் ஒத்துழைத்தன, மேலும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறே செய்யப்பட வேண்டும், இல்லையெனில் விசுவாசமானது ஏற்றுக்கொள்ளப்படாது.

இந்த பாடத்தில் தெளிவாக மனதில் வைத்துக்கொள்ள வேண்டிய முக்கிய கருத்துக்கள் என்னவெனில்: **(1)** விழுந்துப்போன மனிதர்கள் செய்யும் எந்த கிரியையும் பூரணமான கிரியையாக இருக்காது; இதன் விளைவாக, இந்த கிரியைகள் எதுவும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட கூடியதாக இல்லை. **(2)** தேவனுடைய கிருபையின் ஏற்பாட்டின் விதிமுறைகளின் கீழ் விசுவாசத்தைப் பயிற்சி செய்வதன் மூலம் கிறிஸ்தவன் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படுகிறான். இந்த விசுவாசமே அவர் ஏற்றுக் கொள்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது, ஏனெனில் அவன் அபூரணராக இருப்பதால் ஏற்றுக் கொள்ளக்கூடிய கிரியைகளைச் செய்ய முடியாது. **(3)** அவரால் ஏற்றுக் கொள்ளப்படும் விசுவாசமானது, அவனால் இயன்றவரை, தெய்வீக சித்தத்தைச் செய்வதற்கான அவனது முயற்சிகளால் நிச்சயமாக நிரூபிக்கப்பட வேண்டும். **(4)** அபூரணமாக இருப்பதால் கிரியைகளால் மட்டுமே நீதிமானாக்க முடியாது, மேலும் அவைகள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முன்பு விசுவாசமானது நல்ல கிரியைகளை முந்த வேண்டும், என்றாலும் நல்ல கிரியைகள் ஏற்றுக் கொள்ளப்படும் போது, அவற்றின் சொந்த பூரணத்தின் காரணமாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை, ஆனால் விசுவாசத்தின் காரணமாகவே அவைகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன - ஆகவே, கிரியைகள் நம்மை நீதிமானாக்க முடியாது அதே சமயம் விசுவாசம் நம்மை நீதிமானாக்குகிறது, மேலும் கிரியைகள் விசுவாசத்தை ஒதுக்கி வைக்கவில்லை, ஆனால் விசுவாசத்தின் உண்மையான தன்மையை உறுதிப்படுத்துகின்றன.

தேவனைப் பிரியப்படுத்த விரும்பும் அனைவருக்கும் இங்கே ஒரு மாபெரும் பாடம் உள்ளது. நம்முடைய விசுவாசமே அவருக்குப் பிரியமானது - முதலாவது நம்மிடம் வேறு எதுவும் இல்லை; ஆனால் ஜீவியத்தில் பரிசுத்தம் மற்றும் நீதியின் கனிகளை கொடுக்க முயற்சி செய்யாமல், விசுவாசம் மட்டும் தனித்திருந்தால், அது தேவனுக்கும் மனுஷனுக்கும் அவமதிப்பாகவும், ஒரு மரித்த விஷய-மாகவும், சீர்கெட்ட விஷயமாகவும் மாறிவிடும். யாருடைய ஜீவியமானது சுயதிருப்தி மற்றும் பாவம் நிறைந்ததாக இருக்கிறதோ அவர் அறிக்கையிடும் எந்த விசுவாசத்தையும் அவமதித்து காயப்படுத்துகிறார். மேலும், யாரெல்லாம் அவருடைய விசுவாசத்திற்கு இசைவாக வாழத் தவறுகிறார்களோ, அவர்கள் அதை நீண்ட காலம் கடைப்பிடிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பது நமது அனுபவமாக இருக்கிறது. உறுதியான விசுவாசம் இருப்பதாகக் கூறும் பலருக்கு ''சத்தியத்தின் மீதான அன்பு'' இருப்பதில்லை; மேலும் தேவன் மீதான முழு பயபக்தியானது, நல்ல கிரியைகளின்மூலம் உண்மையான விசுவாசத்தை வெளிப்படுத்துகிறது - இதுவே தேவனால் கட்டளையிடப்பட்டு அங்கீகரிக்கப்படும் வகையாகும். நல்ல கிரியைகளில் ஈடுபடாமல் கொஞ்சம் விசுவாசத்தை மட்டும் கொண்டவர்-களுக்கோ கர்த்தர் ''***அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்க-தாகக் கொடிய வஞ்சகத்தை***'' அவர்களுக்கு அனுப்புவார். (2 தெச. 2:12). கர்த்தருடைய ஜனங்கள் உயிருள்ள நிரூபங்களாக அறியப்படுகிறார்கள் என்றும் மற்றும் சகல மனிதர்களாலும் அறிந்தும் வாசிக்கப்பட்டுக் கொண்டுமிருக்-கிறார்கள் என்றும் நினைவில் கொள்வோம்; விசுவாசத்தை விட கிரியைகளே வாசிக்கப்படுகின்றவைகளாய் இருக்-கின்றன, எனவே நமது பாட தலைப்பு வாக்கியத்தின் முக்கியத்துவம், மேலும் மேலும் கிறிஸ்துவை பின்-பற்றுபவர்கள் ஒவ்வொருவரின் உணர்வாக இருக்க வேண்டும்: ''***நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன்.***'' (யாக். 2:18).

## விசுவாசம் மற்றும் கிரியைகளின் எடுத்துக்காட்டுகள்

பரி.யாக்கோபு ''விசுவாசிகளின் தகப்பனாகிய'' ஆபிரகாமினுடைய காரியத்தை மேற்கோள் காட்டுகிறார். அவர் தேவனை விசுவாசித்தார், அது அவருக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று எழுதியிருக்கிறது. (ரோம. 4:3-னுடன் ஒப்பிடவும்). ஆனால் எவ்வளவு விசுவாசம் தேவைப்பட்டது, அது எந்த அளவிற்கு கிரியைகளில் ஈடுபட்டது? ஆபிரகாமின் விசுவாசத்தின் மீது தேவன் ஒரு முக்கியமான பரீட்சையை வைத்தார் என்று அவர் சுட்டிக்காட்டுகிறார், அது

கீழ்ப்படிதலின் கிரியைகளின் துரிதமான நிலைக்கு வளர்ச்சியடையவில்லை என்றால், அது திறனற்றதாக நிரூபிக்கப்பட்டிருக்கும். வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டு பல ஆண்டுகளுக்குப் பிறகு, வாக்குத்தத்தத்தின் வித்தான ஈசாக்கு இளம் வாலிபனாக வளர்ந்திருந்தான், அப்பொழுது அவனை பலிபீடத்தில் பலியிட வேண்டும் என்று தேவன் கட்டளையிட்டார் – ஆகவே, தலை மற்றும் சரீரமாகிய கிறிஸ்து (எபே.1:22,23), ஆபிரகாமின் மெய்யான வித்து ("**நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததி யாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயுமிருக்கிறீர்கள்.**" கலா. 3:29) பலியின் மரணத்தால், மரணபரியந்தம் கீழ்ப்படிதலின் அளவிற்கு எவ்வாறு விசுவாசம் பரீட்சிக்கப்பட வேண்டும் என்று இது முன் உருவகப்படுத்தி காட்டுகிறது.

பிறகு, அவர் நம்மை ஊக்கப்படுத்தாத அளவுக்கு உயர்ந்த விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலுக்கான இவ்வளவு மேன்மையான முன்மாதிரியை கொடுத்திருக்கிறார் என்று அச்சத்துடன் பரி.யாக்கோபு, விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலுக்கு மற்றொரு உதாரணத்தை நம் முன் எடுத்து வைக்கிறார், அது ராகாப். அவள் தேவன் மீது விசுவாசம் கொண்டிருந்தாள், ஆனால், வேவுக்காரர்களின் உதவிக்காகத் தற்காலிகமாகத் தன் சொந்த நலன்களைப் பணயம் வைத்து, கிரியையிலும், உதவிகரமான சேவையிலும் அவளது விசுவாசமானது வளர்ச்சியடையாமல் இருந்திருந்தால் அது அவளுக்குப் பலன் அளித்திருக்காது. வெளிப்படையாக, அவள் விசுவாசம் இல்லாமல் இதுபோன்ற செயல்களைச் செய்திருக்க முடியாது - மேலும் அந்த விசுவாசமே தேவனை விசேஷமாகப் பிரியப்படுத்தியது. ஆனால் விசுவாசத்திற்கு இணங்க அது கிரியைகளுக்கு வழிவகுக்கவில்லை என்றால் அந்த விசுவாசம் கர்த்தருக்குப் பிரியமானதாக இருந்திருக்காது. இவ்வாறு, நமது கிரியைகளின் அடித்தளமாகிய நமது விசுவாசத்துடன் இணைந்து, நமது நீதிமானாக்குதல் சம்பந்தமாக கிரியைகள் எவ்வாறு தொடர்புபடுகின்றன என்பதைப் பார்க்கிறோம்.

> **வேத வாக்கியம் நிறை-வேறிற்று**
>
> *"அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேத வாக்கியம் நிறைவேறிற்று; அவன் தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான். ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியை களினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே." யாக்கோபு 2:23,24*
>
> அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே எண்ணப்படும்.

## ஆவியில்லாத சரீரம்

பரி.யாக்கோபு இந்த எண்ணத்தை சுருக்கமாக கூறுகிறார், "**ஆவியில்லாத** (ஜீவன்) **சரீரம் செத்ததாயிருக்கிறது– போல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது.**" (யாக். 2:26). சரீரத்தை விசுவாசத்திற்கும், ஜீவனின் ஆவியை கிரியைகளுக்கும் ஒப்பிடுவதில் அவர் தவறிழைத்துவிட்டார் என்று சிலர் நினைக்கலாம், அந்த உதாரணம் தலைகீழாக இருக்க வேண்டும் என்று கருதுகிறார்கள், அதாவது சரீரத்தை கிரியைகளுடனும், ஜீவனின் ஆவியை விசுவாசத்துடனும் ஒப்பிட வேண்டும் என்று எண்ணுகிறார்கள். ஆனால் பரி.யாக்கோபு இந்த விஷயத்தை சரியாக வெளிப்படுத்தினார். எந்த ஜீவனின் ஆவியும் அதற்குள் வருவதற்கு முன்பு ஒரு சரீரம் இருக்க வேண்டும். எனவே, விசுவாசம் இருந்தால் மட்டுமே உயிர்பிக்கப்பட முடியும். ஆனால் நாம் "***விசுவாசத்தின் நல்ல* போராட்டத்தைப் போராடி, நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ள**" (1 தீமோ. 6:12) வேண்டுமெனில் உயிர்பிக்குதல் மிகவும் அவசியம்.

## அனலாயும், நிறைவுள்ளவர்களாகவும் இருங்கள்

பரி.யாக்கோபு தனது கருத்தை அழுத்தி மேலும் விசுவாசம் உள்ள சிலரை எழுப்ப முயற்சி செய்கிறார், ஆனால் அவர்கள் உயிர்பிக்குதல் நிலைக்கு (பிரதிஷ்டை) செல்லாதவர்கள். அவர் கேட்கிறார் (யாக். 3:14-ல்) கிரியைகள் எவ்வளவாய் அபூரணமானவையாக இருந்த போதிலும், விசுவாசத்தை குறித்து சாட்சி கொடுப்பதற்கு, பொருத்தமான கிரியைகள் நம்மிடம் இல்லையென்றால், விசுவாசம் உண்டென்று சொல்வதன் மூலம் நமக்கு என்ன லாபம் பிரயோஜனம் இருக்கும் என்று அவர் கேட்கிறார் (ASV யைப் பார்க்கவும்), "அந்த விசுவாசம் அவரைக் இரட்சிக்குமா?" இல்லை என்று நாங்கள் பதிலளிக்கிறோம். பரி. பவுல் கலா. 5:6; 1தெச. 1:3-ல் அறிவிக்கிறார், அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும். ஆனால் விசுவாசம் தான் முக்கியம், கிரியைகள் அல்ல; ஏனெனில் விசுவாசம் பூரணமாகவும், முழுமையானதாகவும் இருக்கும்; ஆனால் கிரியைகளின் பூரணமானது நம்மால் சாத்தியமற்றது, ஏனென்றால் பரிசுத்த ஆவியாகிய இந்தப் பொக்கிஷத்தை, அபூரணமான மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்.

இந்த வழியில் செய்யப்படும் சுயபரிசோதனை மிகவும் சரியானதாகும். தேவனுடைய கிருபையை நாம் கேட்டு, பார்த்து, ருசித்து அதை அனுபவித்து மகிழ்ந்து, மேலும் நமது கிருபையுள்ள பிதாவுக்கு ஊழியம் செய்ய விருப்பமில்லை என்றால் அல்லது நாம் அனுபவிக்கும் அந்த ஆசீர்வாதங்களுக்கு மற்றவர்களுக்கும் உதவ எந்த விருப்பமும் வெளிப்படவில்லை என்றால், அது நமது ஆவிக்குரிய ஜீவஆதாரம் மிகவும் பலவீனமானதாகவும் அழிந்துபோகும் ஆபத்தில் இருப்பதையும் குறிக்கும். ஆனால் அதற்கு மாறாக, நமக்கு நாமே தேவன் மீதுள்ள அன்பில் தீவிரமாக எரிந்து, அவருடைய மாபெரும் இரட்சிப்பின் திட்டத்தைப் போற்றுவதன் மூலமும், மற்றவர்களுக்கு அவர்களின் ஆசீர்வாதத்திற்காகவும், பலப்படுத்துவதற்காகவும், கட்டியெழுப்புவதற்காகவும் நற்செய்தியைச் சொல்ல வேண்டும் என்ற ஆசையுடன் தெய்வீக விசுவாசத்தில் பங்குகொள்வது, நம்மை உற்சாகப்படுத்த வேண்டும். அதிக பக்தி வைராக்கியம், வீரியம், சுறுசுறுப்பு கொண்டவர்களாகிய

அப்போஸ்தலர்களான பேதுரு, யாக்கோபு, யோவான் மற்றும் (சந்தேகத்திற்கு இடமின்றி) பவுல் போன்றவர்களிடத்தில் இயேசு விசேஷமாக அன்புகூர்ந்தார் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகளாகிய நாம் பயத்துடனும், நடுக்கத்துடனும் நம்முடைய இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்பட வேண்டும்; மேலும் தேவனால் அங்கீகரிக்கப்படும் விதமாக நம்மைக் காட்டுவதற்கு கற்றுக்கொண்டிருக்கிறோம்; அவருடைய சத்திய வார்த்தையை சரியாகப் பகுக்கிறபடியால் நாம் அனலுள்ளவர்களாகவும், நிறைவுள்ளவர்களுமாக நம்மால் இருக்க முடியும். ***




# பரி. பவுல் - ஓர் தெரிந்தெடுக்கப்பட்ட பாத்திரமாக - தேவனை மகிமைப்படுத்தினார்

## St. Paul - A Chosen Vessel - Glorified God

**"எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்."** (1 கொரி.10:31).

அப்போஸ்தலராகிய பவுலிடம் எப்பேற்பட்ட ஒரு அற்புதமான முன்மாதிரியை நாம் பெற்றிருக்கிறோம்! கர்த்தருக்கென்று தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு பாத்திரமாக அவருடைய மாபெரும் வெற்றி சந்தேகத்திற்கு இடமின்றி இருந்தது, ஏனென்றால் அவர் தன்னை முழுவதுமாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்தார். "தன் சொந்த சித்தத்தை அல்ல, ஆனால் பிதாவின் சித்தத்தைச் செய்ய" இயேசு அவரை ஓர் அப்போஸ்தலராகவும், ஓர் வாய் கருவியாகவும், ஒரு ஊழியக்காரராகவும் மாபெரும் அளவிற்கு பயன்படுத்தினார். (அவர் தனது ஜீவனை கர்த்தருக்கென்று பிரதிஷ்டை செய்தார்).

அவருடைய முதல் வருகையின் போது, இயேசு இரட்சிப்பின் தெய்வீகத் திட்டத்தைப் பற்றிய விவரங்களை அப்போஸ்தலர்கள் உட்பட அவரைப் அர்ப்பணிப்போடு பின்பற்றினவர்களுக்குக் கூட விளக்கவில்லை, ஏனென்றால் அவர்களும் ஜென்ம சுபாவமான மனுஷர்களாக இருந்தனர். அதனால் தேவனுடைய வார்த்தையின் ஆழமான விஷயங்களைப் புரிந்துக்கொள்ள முடியாது (1 கொரி. 2:9-14). பெந்தெகொஸ்தே நாள் வரை அவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ளவில்லை அதனால் ஜெநிப்பிக்கப்படவும் அபிஷேகம் பண்ணப்படவுமில்லை. அதன்படி, இயேசுவின் போதனைகள் பிரதானமாக உவமைகளாகவும் மறைபொருளாகவும் இருந்தன என்று நாம் வாசிக்கிறோம், ஆயினும் அவருடைய சீஷர்கள், பிரதிஷ்டை செய்தவர்களாக இருந்ததால், அவர் ஏற்ற காலத்தில் அவர்களுக்கு ஆகாரமாக வெளிப்படுத்த விரும்புவதைப் புரிந்துக் கொள்ள முடிந்தது. (மத். 13:10-17). ஒரு சமயம் எஜமானர் தம் சீஷர்களிடத்தில், "**இன்னும் அநேக காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்**" என்று அறிவிக்கிறார். சத்திய ஆவியாகிய அவர் (அது) வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும்(அது) உங்களை நடத்துவார்; அவர் (அது) தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்." (யோவா.16:12, 13; P-5, p.170).


அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட பிறகு, பரி.பவுல் மற்றும் பிற அப்போஸ்தலர்கள் மீது குறைவான வரம்புகளே இருந்தன. அவர்களின் நிரூபங்கள் பல்வேறு பகுதிகளில் உள்ள தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு எழுதப்பட்டுள்ளது, அவர்களுக்கு ஆவிக்குரிய விஷயங்கள் பற்றி சுதந்திரமாக எழுதினர். அவர்களின் சில எழுத்துக்கள் அடிப்படை மூலக் கோட்பாடுகளுக்குரிய வகையைச் சேர்ந்ததாக இருந்தன, அவை கிறிஸ்துவில் உள்ள "**பாலகர்களுக்கு**" பொருத்தமானவை என்றும், மற்ற எழுத்துக்கள் "**பலமான ஆகாரமாக**" – தேவனுடைய திட்டத்தின் ஆழமான விஷயங்கள் என்றும் அவர்கள் அறிவித்தனர். (எபி. 5:13, 14; 6:1-3, 1 பேது. 2:1-3; 2 பேது.3:18).

ஆதி சபைகளில் பொறாமை மற்றும் மார்க்கபேத உணர்வைத் தூண்டுவதற்கு எதிரியால் முடிந்ததை நாங்கள் விசித்திரமாக நினைக்கவில்லை. "**நான் பவுலைச் சேர்ந்தவன்,**" "**அப்பொல்லோவைச் சேர்ந்தவன்,**" அல்லது "**நான் கேபாவை சேர்ந்தவன்**" என்று சிலர் கூறியதில் வெளிப்பட்ட தவறான ஆவிக்கு எதிராக அப்போஸ்தலனாகிய பவுல் இவ்வாறு எழுதினார், "**கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறையப்பட்டான்?**" என்று அவர் அவர்களைக் கேட்கிறார். அத்தகைய முதிர்ச்சியற்ற, மார்க்கபேத நடைமுறைகளுக்காக அவர் அவர்களைக் கடிந்துக்கொள்கிறார். (1 கொரி. 1:10-13; 3:1-7). மேலும், ஒரே பாலினத் திருமணம் மற்றும் பிற பிரபலமான சமூகப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்ட பிற தப்பறைகள் ஆகியவற்றை சரியான தன்மை என கற்பிக்கும் நோக்கத்துடன், பல்வேறு பிரிவுகளாக தங்களைப் பிரித்துக் கொண்ட கிறிஸ்தவர்களுக்கு இந்த மாபெரும் பிரகாசிப்பித்தலை பெற்ற நாளில் அவர் என்ன சொல்லுவார். இந்த பிரகாசிக்கப்பட்ட தலைவர்கள் சீஷர்களைத் தங்களுக்குப்

பின் இழுக்க, குறிப்பாக லவோதிக்கேயாவின் நட்சத்திரமாகிய இரண்டு அங்கத்தினர்கள் மூலம், தேவன் நமக்கு கொடுத்த சத்தியத்திற்கு மாறாக போதிக்கிறார்கள் என்பதைக் கேட்டு நாங்கள் மிகவும் வருந்துகிறோம். (அப். 20:30; ரோம. 16:17)!

பரி.பவுல் பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் மிகவும் கற்றறிந்தவர், யூதாஸ் ஸ்காரியோத் இடத்தை நிரப்ப கர்த்தரால் நியமிக்கப்பட்டவர். தர்சு பட்டணத்தின் சவுலாக, கிறிஸ்துவுக்கும் அவரைப் பின்பற்றுபவர்களுக்கும் எதிரான போரில் அவர் தன்னை மிகவும் முன்கூட்டியே தப்பர்த்தம் கொள்பவராகவும் மதவெறி கொண்டவராகவும் காட்டினார் என்பது உண்மைதான். ஆனால் அவரது புரிதலின் கண்கள் திறக்கப்பட்ட பிறகு, அவர் ஓர் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட புதிய சிருஷ்டியாக மாறிய பிறகு, பரி.பவுல் தெய்வீக விஷயங்களைப் பற்றிய அற்புதமான ஞானத்தை வெளிப்படுத்தினார். தனது உள்ளார்ந்த நுண்ணறிவை விளக்கி, எல்லா மகிமையையும் தேவனுக்கென்று கொடுத்தார்; அவர் தன்னில் ஒன்றும் இல்லாதவர் என்றாலும், அவருக்கு ஏராளமான தரிசனங்களும் வெளிப்பாடுகளும் கொடுக்கப்பட்டதாக அவர் கூறினார். (2 கொரி. 12:1, 7, 11, 12).

இவை அனைத்தும் இயேசு அவரைப் பற்றிக் கூறியதற்கு இசைவாக இருந்தன, "**நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான்... அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன்.**" (அப்.9:15, 16). இயல்பாகவே, நம் கர்த்தர் ஒரு திறமையான மனுஷனை, நன்கு படித்த மனுஷனை, தன் சுய விருப்பத்தை முழுவதுமாக துறந்த ஒரு மனுஷனை மேலான நன்மைக்காக படிப்பறியாதவர்களைக் காட்டிலும் சிறப்பாக பயன்படுத்த முடியும். மேலும் எஞ்சியிருக்கும் சில அப்போஸ்தலர்களில் தாங்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதமையுள்ளவர்களென்றும் ஜனங்கள்கூட அறிந்துணர்ந்ததாக எழுதப்பட்டுள்ளது. (அப் 4:13). இருப்பினும் பரி.பவுல் அப்படி இல்லை. அவர் கல்வியும், அற்புதமான விசாலமான மனதையும் கொண்டிருந்தார். வேதாகமத்தின் ஆழமான விஷயங்களைப் புரிந்து கொள்ளக்கூடிய ஆவியால் - அறிவூட்டப்பட்ட தேவனுடைய பிள்ளைகள் அனைவரும், பரி.பவுலின் எழுத்துக்கள், தர்க்கம், ஞானம் மற்றும் ஆற்றலைக் கண்டு வியப்படைகிறார்கள்! புறஜாதிகளுக்கு கர்த்தரின் வாய்க்கருவியாக முன்னோக்கி தள்ளப்பட்ட பரி.பவுல், புது நேமகம் தொடர்பான விஷயங்களை மற்ற அப்போஸ்தலர்களை விட விரைவாகப் புரிந்துக் கொண்டார்; மேலும் ராஜ்யத்தின் சிலாக்கியங்களில் யூதர்களுடன் புறஜாதியாரும் உடன் சுதந்தரராய் இருக்கப் போகிறார்கள் என்பதை அவர் அறிந்துணர்ந்தார். (எபே. 3:1-12; கொலோ. 1:25-29). இயல்பாகவே, பரி.பவுல் அதிக தூரமாக செல்கிறார் என்று சிலர் நினைத்தார்கள்; மேலும் அவர் பன்னிருவரில் ஒருவரல்ல என்றும், அவர் அப்போஸ்தலர்களில் ஒருவராக தர வரிசையில் இருக்கக்கூடாது என்றும் வாதம் எழுப்பப்பட்டது. பவுல் இதனை




தெளிவுபடுத்தினார், "**மகா பிரதான அப்போஸ்தலரிலும், நான் ஒன்றிலும் குறைவுள்ளவனல்லவென்று எண்ணுகிறேன்.**" (2 கொரி. 11:5).

எவ்வாறாயினும், பரி.பவுல் ஒன்றுமில்லாமல் இருக்கவும், மற்றவர்கள் அவரைப் பற்றிய தங்கள் சொந்த மதிப்பீட்டை செய்ய அனுமதிக்கவும் தயாராக இருந்திருக்கலாம், இருப்பினும் அவர் சத்தியத்திற்கும், சகோதரர்களுக்குமான கடமையை செய்தார். அவருடைய அப்போஸ்தலத்துவத்திற்கான முழு ஆதாரம் தன்னிடம் இருப்பதாகவும், தெய்வீகத் திட்டத்தைப் புரிந்துகொள்வதில், மகா பிரதான அப்போஸ்தரிலும் அவர் ஒன்றிலும் குறைவுள்ளவனல்ல என்றும், மற்ற அனைவரையும் விட அவருக்குத் தான் நம்முடைய கர்த்தராகிய இயேசு வரவிருக்கும் விஷயங்களைக் குறித்து தாம் பேசியவற்றில் பலவற்றை வெளிப்படுத்தினார் என்பதை நிச்சயமற்ற பதங்களில் இல்லாமல் தெளிவாக அவர் நம்மிடம் கூறுவதற்கு இது வழிவகுத்தது . (யோவா.16:13; 2 கொரி. 12:7; கலா. 2:2-10, முதலியன).

பரி. பவுல், கிறிஸ்துவுக்காக பட்டபாடுகளில், கொரிந்துவில் உள்ள சபைக்காக கடினமாக உழைத்தார்; மேலும் அவர்கள் அவரை ஒரு திறமையற்ற போதகராகக் கருதியதால் சத்தியத்தில் சரியான முன்னேற்றம் அடையத் தவறியது அவருக்குப் பரிதாபமாகத் தோன்றியது. 2 கொரி. 11:21-33 புத்தியீனமான புகழ்ச்சி என்று அவர் அழைக்கும் சிலவற்றை அவர்களுக்காக அவர் செய்கிறார். புகழ்ச்சியாக பேசுவதை அவர் அனுமதிப்பதில்லை; மேலும் அவரை கேட்பவர்களுக்காக, சில வழிகளில் அவர்களுக்குத் தெரிவிக்க அவர் விரும்பினார். மேலும், பரிசுத்த ஆவியானது அப்போஸ்தலரை வழிநடத்தியதில் நாம் எவ்வளவு மகிழ்ச்சியடைகிறோம்; நாம் அவரை நன்கு அறிவோம், அவர் ராஜாதி ராஜாவுக்கு அவர் காட்டிய அன்பான விசுவாசத்தையும், இன்றும் கூட விசுவாச வீட்டாருக்கு தெய்வீக சத்தியத்தை எடுத்துக்கூற கர்த்தரால் தெரிந்தெடுக்கப்பட்ட பாத்திரமாக இருந்திருக்கிறார் என்பதையும் அதிக முழுமையாகப் பாராட்டுகிறோம்.

ஆனால் அப்போஸ்தலர் தன்னைப் பற்றிய - அவரது திறமைகள், அவரது சொற்பொழிவு, ஜனங்கள் எவ்வாறு ஈர்க்கப்பட்டனர், எத்தனை பேர் அவரது திறனை அங்கீகரித்தார்கள் போன்றவைக் குறித்து புகழ்ச்சிக் கொள்ளவில்லை. இல்லை, மாறாக மற்றவர்கள் தன்

அவமானத்திற்காக நினைக்கும் விஷயங்களைப் பற்றி அவர் மேன்மைப் பாராட்டினார். சத்தியத்தின் நிமித்தம், கசையடி, மிலாறுகளால் அடிப்பட்டேன், காவல்களில் வைக்கப்பட்டேன், கள்ளரால் வந்த மோசங்களிலும், கள்ளச் சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும் பாடுகளை அனுபவிக்க தேவனுடைய பாதுகாப்பு அவரை அனுமதித்ததை அவர் அவர்களிடம் கூறினார். இந்த விஷயங்கள் அவருக்கு தெய்வீக அன்பு மற்றும் தயவின் அடையாளங்களாக இருந்தன. மேலும் அவர் கர்த்தரையும் அவருடைய நீதியையும் நேசிப்பவர் என்பதற்கும், அவர் கர்த்தருக் காகவும், சத்தியத்திற்காகவும் பாடுபடுவதற்கு தயாராக இருந்தார் என்பதற்கும் சாட்சியளித்தார்.

2 கொரி. 1:3-9-வரையுள்ள வசனங்கள் தேவனுடைய வார்த்தையில் மிகவும் விலையேறப்பெற்ற பகுதியாகும். வேறு எந்த பகுதியிலும் நாம் காணாத தகவல்களை இது வழங்குகிறது. சிலுவை வீரரைக் குறித்தும், அவர் என்ன தாங்கினார் என்பதைப் பற்றியும் ஒரு காட்சியை மிருதுவாக நம் முன் வைக்கிறது. ''**நீ மரணபரியந்தம் உண்மையாயிரு.**'' என்று அது நம்மிடம் கூறுகிறது. இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுங்கள்; அவருடைய இந்த உன்னதமான சீஷரையும் பின் பற்றுங்கள். உங்களைக் குறித்து பெருமை கொள்ளாதீர்கள். ஆனால் தேவனைக் குறித்தும் அவருடைய சத்தியத்துடன் தொடர்புடைய உங்கள் ஊழியத்தின் சிலாக்கியங்களைக் குறித்தும் மேன்மை பாராட்டுங்கள்.

இங்கே யுகத்தின் முடிவில், உன்னதமான பரி. பவுல் மற்றும் ஆட்டுக்குட்டியின் மனைவியை உள்ளடக்கிய மற்றவர்கள் அனைவரும் அவரால் நித்திய மகிமைக்குள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, கறையின்றி, பிழையின்றி பிதாவின் முன் ஒப்புவிக்கப்பட்ட காலத்திற்கு வந்துள்ளோம். (எபே. 5:25-27; வெளி. 19:7, 8). அந்த மகிமையான கூட்டத்தில் உள்ள அனைவரும் உண்மையுள்ள போர்ச்சேவகர்களாய் இருந்தனர், தப்பியோடியவர்கள் அல்ல, கர்த்தரைப் பற்றி வெட்கப்படவில்லை, அவருடைய சத்தியத்திற்காக வெட்கப்படவில்லை என்று நாம் உறுதியாக நம்பலாம். அப்படிப்பட்டவர்களைக் குறித்து எஜமானர், நான் வெட்கப்படமாட்டேன், பிதா மற்றும் அவருடைய பரிசுத்த தூதர்களுக்கு முன்பாக அவர்களுடைய நாமங்களை அறிக்கையிடுவேன் என்று அறிவிக்கிறார் (மத். 10:32, 33; மாற். 8:38; லூக். 12:8,9).

பலவிதமான துன்பங்கள், கசையடிகள், காவலில் வைத்தல் மற்றும் பலவிதமான மோசங்களில் துன்புறுதல் ஆகியவை அப்போஸ்தலரின் சகிப்புத்தன்மையின் ரகசியமானது, 2 கொரி. 12:9-ன் வார்த்தைகளில் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது, ''**அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்: பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்.**'' கர்த்தருடைய கிருபை போதுமானது. கர்த்தருடைய வல்லமை அவருடைய பலவீனத்தில் பூரணப்படுத்தப்பட்டது. மேலும் இதுவே ஒவ்வொரு வெற்றிகரமான கிறிஸ்தவ ஜீவியத்தின் ரகசியம் இல்லையா? பிதாவினுடைய ஆவி அவரில் இருப்பதும், பிதாவின் மீது அவர் சார்ந்திருப்பதும், பிதாவின் முகத்தின் ஒளியைத் தேடுவதுமாகிய இது, நம் எஜமானரின் காரியத்தில் ஒத்திருந்தது போல் இல்லையா? உண்மையில் தேவனுடைய வல்லமையானது நம் இரட்சகரில் கிரியை செய்து, பிதாவுக்குப் பிரியமானதை விரும்பவும் அதைச் செய்யவும் வைக்கிறது (யோவா. 1:32, 33; 3:34; 5:19; எபி. 10:5-7; 12:2; பிலி. 2 :13)?


கர்த்தருடைய நாளிலிருந்து அவரைப் பின்பற்றுகிற ஒவ்வொருவருக்கும் இதே நிலைதான். எஜமானர் தம்மைப் பின்பற்றுபவர்களைப் பற்றி உண்மையாகவே கூறியது, ''**என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.**'' (யோவா.15:5). இது நமது கர்த்தராகிய இயேசுவின் மூலமாகவும், சத்திய வார்த்தையின் மூலமாகவும், இயேசுவை பின்பற்றுபவர்கள் மூலமாகவும் செயல்-படுத்தப்படும் தெய்வீக வல்லமையாகும்; இந்த வல்லமை-யானது கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களான பலவீனமான-வர்களிலும் மற்றும் பலமுள்ளவர்களிலும் செயல்படுத்தக் கூடியது. கர்த்தருடைய கிருபை அனைவருக்கும் மற்றும் ஒவ்வொரு தேவைக்கும் போதுமானதாக இருக்கிறது. எவ்வாறாயினும், இந்த மாபெரும் போதுமான தன்மை-யானது கர்த்தருடைய ஜனங்கள் மீது நிபந்தனையின்றி ஊற்றப்படுவதில்லை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது; ஆனால் அவர்களின் தேவைக்கும், அவர்களின் அங்கீகாரத்திற்கான பதிலாகவும், அவர்களின் தெய்வீக கிருபையின் ஜெபத்திற்கான உதவியாக தேவைப்படும் ஒவ்வொரு நேரத்திலும் கொடுக்கப்படுகிறது.

பரி.பவுல் இன்றைய காலகட்ட பிரதிஷ்டையாளர்-களுக்கும் ஓர் அழகான முன்மாதிரியாக இருக்கிறார். விரிவாக்கப்பட்ட சுவிசேஷ யுக அறுவடையில் பிரதிஷ்டை-யின் பொருத்தனையை செய்பவர்களுக்கும், திரும்பக்-கொடுத்தலின் காலத்திற்கு முந்தைய பிரதிஷ்டையாளர்-களுக்கும், எபிஃபெனி பாளயக்காரர்கள் என அழைக்கப் படுகிறவர்களுக்கும் ஓர் அழகான முன்மாதிரியாயிருக்கிறார்; ஏனென்றால் அவர்களின் நிலைப்பாடு எபிஃபெனி பாளையத்தில் தேவனுக்கு முன்பாக உள்ளது என சித்திரப்படுத்தப்பட்டுள்ளது. ''**தாவீதும் பிரபுக்களும் லேவியருக்குப் பணிவிடைக்காரராக வைத்த நிதனீமியரில்**'' (எஸ்றா 8:20) என்ற நிறைவேறுதலான நிதனீமியர்களாக, இன்றைய இந்த பிரதிஷ்டையாளர்கள், சாலொமோனின் ஞானத்தைத் தேடுவதில் சேபாவின் ராஜஸ்திரீயை போன்றவர்களாக இருக்கிறார்கள்.

உறுதியுடன் இருந்து தீமையான நிலைமைகளுக்கு மத்தியிலும் தங்கள் பிரதிஷ்டையை நிறைவேற்றும்படியாக

பிரதிஷ்டையாளர்கள் அனைவரையும் நாங்கள் மனதார ஊக்குவிக்கிறோம். (பிலி. 2:15). சுயத்தையும், உலகத்தையும் வெறுத்து, தேவனுடைய வார்த்தையை தியானிப்பதிலும், விழித்திருப்பதிலும் ஜெபத்திலும், தேவனுடைய சத்தியத்தைப் பரப்புவதிலும், தேவனுடைய வார்த்தைக்கு இசைவாக நமது குணத்தை வளர்த்துக் கொள்வதிலும் மற்றும் தேவனுடைய வார்த்தைக்கு உண்மையாக இருப்பதன் பொருட்டு தேவைப்படும்பொழுது பாடனுபவிப்பதிலும், இயேசுவினுடைய முன்மாதிரியை பரி.பவுல் பின்பற்றியது போலவே தொடர்ந்து பின்பற்றுவதன் மூலம் அவர்கள் இதனைச் செய்கிறார்கள். இவற்றைச் செய்யும் நாம் இயேசுவைப் பின்பற்றும் போதும், அவ்வாறு செய்வதால் பிதாவைப் பிரியப்படுத்தும் போதும் யேகோவா தேவன் நம் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக! ***



# வேதாகமம் பேசுகிறது

BIBLE TALKS

**ஒரு போதுமே பழைமையாகாத ஒரு புஸ்தகத்திலிருந்து எளிய மொழியில் கதைகள்**

## யாக்கோபு மற்றும் ஏசாவின் சந்திப்பு

## ஆதி. 32:1—33:18

யாக்கோபு பிரயாணம் பண்ணுகையில், தேவதூதர்கள் அவனைச் சந்தித்தார்கள். யாக்கோபு அவர்களைக் கண்டபோது: இது தேவனுடைய சேனை என்று சொல்லி, அந்த ஸ்தலத்திற்கு மக்னாயீம் என்று பேரிட்டான்.

பின்பு, யாக்கோபு ஏதோம் சீமையாகிய சேயீர் தேசத்திலிருக்கிற தன் சகோதரனாகிய ஏசாவினிடத்துக்குப் போகும்படி ஆட்களை அழைப்பித்து: நீங்கள் என் ஆண்டவனாகிய ஏசாவினிடத்தில் போய், நான் இதுவரைக்கும் லாபானிடத்தில் தங்கியிருந்தேன் என்றும், எனக்கு எருதுகளும், கழுதைகளும், ஆடுகளும், வேலைக்காரரும், வேலைக் காரிகளும் உண்டென்றும், உம்முடைய கண்களில் எனக்குத் தயவு கிடைக்கத்தக்கதாக ஆண்டவனாகிய உமக்கு இதை அறிவிக்கும்படி ஆட்களை அனுப்பினேன் என்றும் உம்முடைய தாசனாகிய யாக்கோபு சொல்லச் சொன்னான் என்று சொல்லும்படி கட்டளைக் கொடுத்துத் தனக்கு முன்னாக அவர்களை அனுப்பினான்.

அந்த ஆட்கள் யாக்கோபினிடத்துக்குத் திரும்பிவந்து: நாங்கள் உம்முடைய சகோதரனாகிய ஏசாவினிடத்துக்குப் போய் வந்தோம்; அவரும் நானூறு பேரோடே உம்மை எதிர்கொள்ள வருகிறார் என்றார்கள். அப்பொழுது யாக்கோபு மிகவும் பயந்து, வியாகுலப்பட்டு, தன்னிடத்திலிருந்த ஜனங்களையும், ஆடுமாடுகளையும், ஒட்டகங்களையும், இரண்டு பகுதியாகப் பிரித்து: ஏசா ஒரு பகுதியின் மேல் விழுந்து அதை முறிய அடித்தாலும், மற்றப் பகுதி தப்பித்துக்கொள்ள இடம் உண்டு என்றான்.

பின்பு யாக்கோபு: என் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும், என் தகப்பனாகிய ஈசாக்கின் தேவனுமாய் இருக்கிறவரே: உன் தேசத்துக்கும் உன் இனத்தாரிடத்துக்கும் திரும்பிப்போ, உனக்கு நன்மை செய்வேன் என்று என்னுடனே சொல்லியிருக்கிற கர்த்தாவே, அடியேனுக்குத் தேவரீர் காண்பித்த எல்லா தயவுக்கும் எல்லா சத்தியத்துக்கும் நான் எவ்வளவேனும் பாத்திரன் அல்ல, நான் கோலும் கையுமாய் இந்த யோர்தானைக் கடந்துபோனேன்; இப்பொழுது இவ்விரண்டு பரிவாரங்களையும் உடையவனானேன். என் சகோதரனாகிய ஏசாவின் கைக்கு என்னைத் தப்புவியும், அவன் வந்து என்னையும் பிள்ளைகளையும் தாய்மார்களையும் முறிய அடிப்பான் என்று அவனுக்கு நான் பயந்திருக்கிறேன். தேவரீரோ: நான் உனக்கு மெய்யாகவே நன்மை செய்து, உன் சந்ததியை எண்ணிமுடியாத கடற்கரை மணலைப்போல மிகவும் பெருகப்பண்ணுவேன் என்று சொன்னீரே என்றான்.

அன்று ராத்திரி அவன் அங்கே தங்கி, தன் கைக்கு உதவினவைகளிலே தன் சகோதரனாகிய ஏசாவுக்கு வெகுமானமாக, இருநூறு வெள்ளாடுகளையும், இருபது வெள்ளாட்டுக் கடாக்களையும், இருநூறு செம்மறியாடுகளையும், இருபது ஆட்டுக்கடாக்களையும், பால் கொடுக்கிற முப்பது ஒட்டகங்களையும், அவைகளின் குட்டிகளையும், நாற்பது கடாரிகளையும், பத்துக் காளைகளையும், இருபது கோளிகைக் கழுதைகளையும், பத்துக் கழுதைக்குட்டிகளையும் பிரித்தெடுத்து, வேலைக்காரர் கையில் ஒவ்வொரு மந்தையைத் தனித்தனியாக ஒப்புவித்து, நீங்கள் மந்தைக்கு முன்னும் பின்னுமாக இடம் விட்டு எனக்கு முன்னாக ஓட்டிக்கொண்டுபோங்கள் என்று தன் வேலைக்காரருக்குச் சொல்லி,

முன்னே போகிறவனை நோக்கி: என் சகோதரனாகிய ஏசா உனக்கு எதிர்ப்பட்டு: நீ யாருடையவன்? எங்கே போகிறாய்? உனக்குமுன் போகிற மந்தை யாருடையது? என்று உன்னைக் கேட்டால், நீ: இது உமது அடியானாகிய யாக்கோபுடையது; இது என் ஆண்டவனாகிய ஏசாவுக்கு அனுப்பப்படுகிற வெகுமதி; இதோ, அவனும் எங்கள் பின்னே வருகிறான் என்று சொல் என்றான். இரண்டாம் மூன்றாம் வேலைக்காரனையும், மந்தைகளின் பின்னாலே போகிற அனைவரையும் நோக்கி: நீங்களும் ஏசாவைக் காணும்போது, இந்தப் பிரகாரமாக அவனோடே சொல்லி, இதோ, உமது அடியானாகிய யாக்கோபு எங்கள் பின்னாலே வருகிறான் என்றும் சொல்லுங்கள் என்று கட்டளையிட்டான்; முன்னே வெகுமதியை அனுப்பி, அவனைச் சாந்தப்படுத்திக்கொண்டு, பின்பு அவன் முகத்தைப் பார்ப்பேன்,

அப்பொழுது ஒருவேளை என்பேரில் தயவாயிருப்பான் என்றான்.

## ஓர் தேவதூதன் யாக்கோபுடன் போராடினார்

அந்தப்படியே வெகுமதி அவனுக்குமுன் போயிற்று; அவனோ அன்று ராத்திரி பாளையத்திலே தங்கி, இராத்திரியில் எழுந்திருந்து, தன் இரண்டு மனைவிகளையும், தன் இரண்டு பணிவிடைக்காரிகளையும், தன்னுடைய பதினொரு குமாரரையும் கூட்டிக்கொண்டு, யாப்போக்கு என்கிற ஆற்றின் துறையைக் கடந்தான். அவர்களையும் சேர்த்து, ஆற்றைக் கடக்கப்பண்ணி, தனக்கு உண்டான யாவையும் அக்கரைப்படுத்தினான்.

யாக்கோபு பிந்தித் தனித்திருந்தான்; அப்பொழுது ஒரு புருஷன் பொழுது விடியுமளவும் அவனுடனே போராடி, அவனை மேற்கொள்ளாததைக் கண்டு, அவனுடைய தொடைச்சந்தைத் தொட்டார்; அதினால் அவருடனே போராடுகையில் யாக்கோபின் தொடைச்சந்து சுளுக்கிற்று. அவர்: நான் போகட்டும், பொழுது விடிகிறது என்றார். அதற்கு அவன்: நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன் என்றான். அப்பொழுது அவர்: உன் பேர் என்ன என்று கேட்டார்; யாக்கோபு என்றான். அப்பொழுது அவர்: உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரயேல் என்னப்படும்; தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே என்றார்.

அப்பொழுது யாக்கோபு: உம்முடைய நாமத்தை எனக்கு அறிவிக்க வேண்டும் என்று கேட்டான்; அதற்கு அவர்: நீ என் நாமத்தைக் கேட்பானேன் என்று சொல்லி, அங்கே அவனை ஆசீர்வதித்தார். அப்பொழுது யாக்கோபு: நான் தேவனை முகமுகமாய்க் கண்டேன், உயிர் தப்பிப் பிழைத்தேன் என்று சொல்லி, அந்த ஸ்தலத்துக்கு ‘பெனியேல்’ என்று பேரிட்டான். அவன் பெனியேலைக் கடந்து போகையில், சூரியன் உதயமாயிற்று; அவன் தொடைச்சுளுக்கினாலே நொண்டி நொண்டி நடந்தான். அவர் யாக்கோபுடைய தொடைச் சந்து நரம்பைத் தொட்டபடியால், இஸ்ரயேல் புத்திரர் இந்நாள்வரைக்கும் தொடைச்சந்து நரம்பைப் புசிக்கிறதில்லை.

யாக்கோபு தன் கண்களை ஏறெடுத்து, இதோ, ஏசாவும் அவனோடேகூட நானூறு மனிதரும் வருகிறதைக் கண்டு, பிள்ளைகளை லேயாளிடத்திலும் ராகேலிடத்திலும் இரண்டு பணிவிடைக்காரிகளிடத்திலும் வெவ்வேறாகப் பிரித்துவைத்து, பணிவிடைக்காரிகளையும் அவர்கள் பிள்ளைகளையும் முதலிலும், லேயாளையும் அவள் பிள்ளைகளையும் இடையிலும், ராகேலையும் யோசேப்பையும் கடையிலும் நிறுத்தி:

தான் அவர்களுக்கு முன்னாக நடந்து போய், ஏழுவிசை தரைமட்டும் குனிந்து வணங்கி, தன் சகோதரன் கிட்டச் சேர்ந்தான். அப்பொழுது ஏசா எதிர்கொண்டு ஓடிவந்து, அவனைத் தழுவி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ்செய்தான்; இருவரும் அழுதார்கள். யாக்கோபின் கூட்டத்தாரும் அருகில் இருந்தனர்.

## ஏசாவுக்கு யாக்கோபின் வெகுமதி

அவன் தன் கண்களை ஏறெடுத்து, ஸ்திரீகளையும் பிள்ளைகளையும் கண்டு: உன்னோடிருக்கிற இவர்கள் யார்? என்றான். அதற்கு அவன்: தேவன் உமது அடியானுக்கு அருளின பிள்ளைகள் என்றான். அப்பொழுது பணிவிடைக்காரிகளும் அவர்கள் பிள்ளைகளும் சேர்ந்து வந்து வணங்கினார்கள். லேயாளும் அவள் பிள்ளைகளும் சேர்ந்து வந்து வணங்கினார்கள்; பின்பு யோசேப்பும் ராகேலும் சேர்ந்து வந்து வணங்கினார்கள் அப்பொழுது அவன்: எனக்கு எதிர்கொண்டு வந்த அந்த மந்தையெல்லாம் என்னத்துக்கு என்றான். அதற்கு அவன்: என் ஆண்டவனின் கண்களில் எனக்குத் தயவு கிடைக்கிறதற்கு என்றான்.

அதற்கு ஏசா: என் சகோதரனே, எனக்குப் போதுமானது உண்டு; உன்னுடையது உனக்கு இருக்கட்டும் என்றான். அதற்கு யாக்கோபு: அப்படி அல்ல, உம்முடைய கண்களில் எனக்குத் தயவு கிடைத்ததேயானால், என் வெகுமதியை என் கையிலிருந்து ஏற்றுக்கொள்ளும்; நீர் என்மேல் பிரியமானீர், நான் உம்முடைய முகத்தைக் கண்டது தேவனுடைய முகத்தைக் கண்டதுபோல இருக்கிறது. தேவன் எனக்கு அநுக்கிரகம் செய்திருக்கிறார்; வேண்டியதெல்லாம் எனக்கு உண்டு; ஆகையால் உமக்குக் கொண்டுவரப்பட்ட என் காணிக்கையை ஏற்றுக்கொள்ளும் என்று சொல்லி, அவனை வருந்திக் கேட்டுக்கொண்டான்; அப்பொழுது அவன் அதை ஏற்றுக்கொண்டான்.

பின்பு அவன்: நாம் புறப்பட்டுப் போவோம் வா, நான் உனக்கு முன் நடப்பேன் என்றான். அதற்கு அவன்: பிள்ளைகள் இளம் பிள்ளைகளென்றும், கறவையான ஆடு, மாடுகள் என்னிடத்தில் இருக்கிறது என்றும் என் ஆண்டவனுக்குத் தெரியும்; அவைகளை ஒரு நாளாவது துரிதமாய் ஓட்டினால், மந்தையெல்லாம் மாண்டுபோம். என் ஆண்டவனாகிய நீர் உமது அடியானுக்கு முன்னே போம்; நான் சேயீருக்கு என் ஆண்டவனிடத்தில் வருமளவும், எனக்குமுன் நடக்கிற மந்தைகளின் கால் நடைக்கும் பிள்ளைகளின் கால்நடைக்கும் தக்கதாக, மெதுவாய் அவைகளை நடத்திக்கொண்டு வருகிறேன் என்றான். அப்பொழுது ஏசா: என்னிடத்திலிருக்கிற ஜனங்களில் சிலரை நான் உன்னிடத்தில் நிறுத்திவிட்டுப் போகட்டுமா என்றான். அதற்கு அவன்: அது என்னத்திற்கு, என் ஆண்டவனுடைய கண்களில் எனக்குத் தயவுகிடைத்தால் மாத்திரம் போதும் என்றான். அன்றைத் தினம் ஏசா திரும்பித் தான் வந்த வழியே சேயீருக்குப் போனான். யாக்கோபு சுக்கோத்துக்குப் பிரயாணம்பண்ணி, தனக்கு ஒரு வீடு கட்டி, தன் மிருக ஜீவன்களுக்குக் கொட்டாரங்களைப் போட்டான்; பின்பு சீகேமுக்கு அருகில் உள்ள சாலேமுக்குச் சென்று தங்கினான். ***

Visit us at : www.biblestandardindia.com

For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact:

Laymen's Home Missionary Movement

Bro. V. Vincent Jeyakumar

[Representative of India]

#4/81, Eluvaraimukki Main Road, Eluvaraimukki Post, Near Thoppur,
Nazareth - 628 617, Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincentlhmm@gmail.com; Cell : 98949 26629

FOR PRIVATE CIRCULATION ONLY